பக்கங்கள் - 25

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | மாசி 15 வெள்ளிக்கிழமை 27.02.2026 | அதிர்வு 211

## சுரேஷ் சலேயின் கைது அரசியல் பழிவாங்கல்!

### விமலின் கட்சி கடும் கண்டனம்



உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளில், அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் 08

# சுரேஷ் சலேயின் கைது வெறும் நாடகம் மட்டுமே! உண்மையான சூத்திரதாரி நௌபர் மௌலவியே!!

### ராஜபக்ஷக்களின் சகா சரத் வீரசேகர காட்டம்

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி நௌபர் மௌலவியே தவிர, முன்னாள் புலனாய்வுப் பணிப்பாளர் சுரேஷ் சலே அல்லர் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரும் முன்னாள் அமைச்சருமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- 08



# புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை முறியடிக்க தமிழரசுக் கட்சி படு தீவிரம்

## போராட்டங்களில் பங்கேற்குமாறு கட்சியின் ஆதரவாளர்களிடம் சுமந்திரன் வேண்டுகோள்

(எஸ். நிதர்ஷன்)

நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும் எனவும், அதற்கு மாற்றீடாகக் கொண்டு வரப்படவுள்ள புதிய சட்டமூலத்தை எதிர்க்க வேண்டும் எனவும் இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இச்சட்டங்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் அனைத்துப் போராட்டங்களிலும் தமிழரசுக் 08



# நாமலின் ஆளுமைக்கு முன்னால் கேள்வி கேட்க திராணியற்றவர்களே லண்டன் உரைக்கு எதிர்ப்பு



### இப்படி மொட்டுக் கட்சி சாடல்

பிரித்தானியாவின் புகழ்பெற்ற ஒக்ஸ்போர்ட் மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக ஒன்றியங்களில் உரை நிகழ்த்தச் சென்ற நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக, தமிழ் மாணவர் அமைப்புகள் முன்னெடுத்த எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து முன்னாள் அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர கடும் விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா 08




தமிழக சட்டசபைத் தேர்தல் நெருங்குகிறது. அந்த அரசியல் சூட்டில் வழமை போல மீண்டும் கச்சதீவுப் பிரச்சினை தமிழகத்தில் எதிரொலிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

தமிழகக் கட்சிகள் பலவும் கச்சதீவு மீதான இந்தியாவின் உரிமையைக் கோர வேண்டும் என்று வலியுறுத்தி வரும் சமயத்தில், அந்தத் தீவின் மீதான தன்னுடைய இறைமையை உறுதியோடு வெளிப்படுத்திக் காட்டும் விதத்தில் இலங்கையின் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவே நேரடியாக அங்கு விஜயம் செய்திருந்தார்.

சட்டரீதியாக அந்த தீவின் மீதான இலங்கையின் உரித்தை வெளிப்படுத்தும் விதத்தில், வடக்கே வரும் இலங்கையின் பிரதம நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேன இப்போது கச்சதீவுக்கு விஜயம் செய்ய இருக்கின்றார் என்ற செய்தி கிடைத்திருக்கிறது.

இன்று வடக்கே வரும் பிரதம நீதியரசர் இன்றைய தினம் வவுனியா, 07

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally





# மறைந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணுவின் புகழுடலுக்கு சிறீதரன் எம்.பி. அஞ்சலி!

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும் பொதுவுடைமை இயக்கத்தின் முதுபெரும் தலைவருமான தோழர் இரா. நல்லகண்ணுவின் புகழுடலுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியில் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

வயது முதிர்வு மற்றும் உடல்நலக் குறைவு காரணமாக 101 ஆவது வயதில் காலமான நல்லகண்ணுவின் புகழுடல், சென்னை டி.என்.பி நகரில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகத்தில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உட்படப் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும், சமூக ஆர்வலர்களும் நல்லகண்ணுவின் புகழுடலுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர். இந்நிலையில், தமிழகத்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ள யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், சி.பி.ஐ அலுவலகத்துக்கு நேரில் சென்று அன்னாரது புகழுடலுக்கு மலர் வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.



இதுகுறித்து தனது சமூக வலைத் தளத்தில் பதிவிட்டுள்ள சிறீதரன் எம்.பி., "இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்காற்றியமையுடன், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகத் தனது வாழ்நாளை முழுமையாக அர்ப்பணித்த பெருந்தகை நல்லகண்ணு ஐயாவுக்கு நேரில் சென்று இறுதி அஞ்சலி செலுத்தினேன்.

எளிமை, நேர்மை, சமூக நீதி மற்றும் சமத்துவம் ஆகிய உயரிய மதிப்புகளின் உருவாக வாழ்ந்த அவர், தலைமுறைகள் கடந்தும் வழிகாட்டும் ஒளியாக நிலைத்திருப்பார்.

அவரது மறைவு அரசியல் உலகிற்கும், சமூக நீதிக்காகப் போராடும் மக்களுக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்." – என்று தெரிவித்துள்ளார்.







## அம்பாறையில் கோர விபத்து

# மின் கம்பத்துடன் மோதி இராணுவச் சிப்பாய் பலி!

### விடுமுறையில் சென்று பாட்டியைப் பார்த்துவிட்டு திரும்பியபோது நேர்ந்த விபரீதம்

**(பாறுக் ஷிஹான்)**

அம்பாறை – உஹன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சமன பெத்த பகுதியில், மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி உயர் மின்னழுத்த மின்கம்பத்துடன் மோதியதில் இளம் இராணுவச் சிப்பாய் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை 1:15 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் படுகாயமடைந்த அவர், உடனடியாக மற்றுமொரு வாகனத்தின் மூலம் அம்பாறை பொது மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்



இலங்கை இராணுவத்தின் மின் மற்றும் இயந்திரவியல் பட்டாலியனைச் சேர்ந்த 22 வயதுடைய ஆர்.எச். உதிக மலிந்த ரணசிங்க என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் முல்லைத்தீவு இராணுவ முகாமில் பணியாற்றி வந்தவராவார்.

ஆரம்பகட்ட விசாரணைகளின்படி, விடுமுறையில் பொலன்னறுவைக்குச் சென்றிருந்த மேற்படி இராணுவச் சிப்பாய், பின்னர் மஹியங்கனையில் உள்ள தனது பாட்டியைப் பார்த்துவிட்டு, அம்பாறை – பொல்வத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த போதே இந்த விபத்து நேர்ந்துள்ளது என்று தெரியவந்துள்ளது.

அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் ஆலோசனையின் பேரில், உஹன பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட போக்குவரத்துப் பிரிவின் அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# இரு லொறிகள் நேருக்கு நேர் மோதல்! சாரதி ஒருவர் பரிதாபகரமாக மரணம்!!

கம்பஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கம்பஹா – ஜா– எல வீதியில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்ற கோர விபத்தில் லொறிச் சாரதி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜா – எல நோக்கிப் பயணித்த லொறியொன்று, எதிர்த்திசையிலிருந்து வந்த சிறிய லொறியுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த




சிறிய லொறியின் சாரதி, உடனடியாகக் கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும், அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர் ஜா – எல பகுதியைச் சேர்ந்த 49 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மற்றைய லொறியின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்து குறித்த மேலதிக விசாரணைகளைக் கம்பஹா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.




## "பழையதும் வேண்டாம், புதியதும் வேண்டாம்:"

# ஆயிரக்கணக்கான கையொப்பங்கள் இன்று நீதி அமைச்சிடம் சமர்ப்பிப்பு!

(எஸ்.நிதர்ஷன்)

தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தையோ அல்லது அரசைப் பாதுகாக்கும் வகையில் உருவாக்கப்படவுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தையோ ஏற்றுக்கொள்ள முடியாது என வலியுறுத்தி, வடக்கு – கிழக்கு மாகாணங்களில் திரட்டப்பட்ட ஆயிரக்கணக்கான கையொப்பங்கள் இன்று நீதி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் அமைப்பால் முன்னெடுக்கப்பட்ட இந்த மாபெரும் கையெழுத்துப் போராட்டத்தின் ஆவணங்கள் கையளிக்கும் நிகழ்வு, நேற்று யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள அவ்வமைப்பின் சேகரிப்பு மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

நல்லூர் சிவகுரு ஆதீனத்தில் வேலன் சுவாமி தலைமையில் நடைபெற்ற இந்த ஊடக சந்திப்பில், பிராந்திய சேகரிப்பாளர்களிடமிருந்து பெறப்பட்ட கையொப்பப் பட்டியல்கள் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்பட்டன.

கடந்த பெப்ரவரி 14ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் பொது அமைப்புகள் மற்றும் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இக்கையொப்பங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

ஊடக சந்திப்பில் முன்வைக்கப்பட்ட முக்கிய கருத்துகள்:–

அரசின் வாக்குறுதி மீறல்:

"அனைத்து அடக்குமுறைச் சட்டங்களும் இரத்து செய்யப்படும் என்ற வாக்குறுதியுடனேயே இந்த அரசு ஆட்சிக்கு வந்தது. ஆனால், பழைய சட்டத்தை ஒழிப்பதாகக் கூறிக்கொண்டு, அரசைப் பாதுகாக்கும் புதிய சட்ட வரைவை முன்வைப்பது மக்கள் விரோதச் செயலாகும்."

**நீதியற்ற தடுத்துவைப்பு:**

"பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பல ஆண்டுகளாக அநியாயமாக பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். விடுவிக்கப்பட்டவர்களுக்குக் கூட அவர்கள் இழந்த காலத்திற்கான எவ் வித இழப்பீடுகளும் வழங்கப்பட வில்லை."

**உரிமைகள் பறிப்பு:**

"புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டால், சாதாரண குடிமக்களின் கருத்துச் சுதந்திரம், எதிர்ப்புத் தெரிவிக்கும் உரிமை மற்றும் தனியுரிமை என்பன கடுமையாகப் பாதிகப்படும்."

இந்தச் சட்ட வரைவு குறித்து நீதி அமைச்சுக்குத் தமது கடும் எதிர்ப்பைப் பதிவு செய்யும் நோக்கில், திரட்டப்பட்ட அனைத்து கையொப்பங்களும் இன்று அனுப்பி வைக்கப்படவுள்ளன என்று அமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.















# ஜப்பான் பேரரசரின் பிறந்தநாள் விழா: கொழும்பில் விசேட வரவேற்பு நிகழ்வு!

ஜப்பான் பேரரசரின் 66 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, இலங்கையிலுள்ள ஜப்பான் தூதரகம் ஏற்பாடு செய்த விசேட வரவேற்பு நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள தூதுவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வெகுவிமர்சையாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். மேலும், முன்னாள் ஜனாதிபதிகள், சபாநாயகர், அமைச்சரவை அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இராஜதந்திரப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் இதில் பங்கேற்றனர்.

வரவேற்பு நிகழ்வுக்குத் தலைமையேற்று உரையாற்றிய ஜப்பான் தூதுவர் இசொமதா, 1964 டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் பங்கேற்று, இறுதி வரை தளராத உறுதியுடன் ஓடி முடித்த இலங்கை தடகள வீரர் ரணதுங்க கருணாநந்தாவின் மனவலிமையை ஒரு சிறந்த உதாரணமாகக் குறிப்பிட்டார்.

இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் முன்னேற்றத்தைப் பாராட்டிய அவர், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய விரிவாக்கத் திட்டம் உள்ளிட்ட யென் கடன் திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருவதைச் சுட்டிக்காட்டினார்.

எதிர்காலத்தில் பாரிய உட்கட்டமைப்புத் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளும் இணைந்து பணியாற்றும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இலங்கை அரசின் சார்பில் உரையாற்றிய அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ, ஜப்பான் பேரரசருக்கும் மக்களுக்கும் தனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்தார். கடந்த ஆண்டு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜப்பானுக்கு மேற்கொண்ட விஜயத்தை நினைவுகூர்ந்த அவர், முதலீடு, கலாச்சார ஒத்துழைப்பு மற்றும் இருநாட்டு மக்களுக்கிடையிலான உறவு ஆகியவற்றை மேலும் வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

இந்த விழாவில் ஜப்பானிய பாரம்பரியக் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில், இகெபானா (மலர் அலங்காரம்), ஹினா-நிங்யோ பொம்மைகள், சாமுராய் தலைக்கவசங்கள் (யோரோய்-கபுடோ) மற்றும் கராத்தே கண்காட்சி ஆகியன இடம்பெற்றன. அத்துடன் விருந்தினர்களுக்கு ஜப்பானிய பாரம்பரிய உணவுகளும் பானங்களும் பரிமாறப்பட்டன.

இலங்கை மற்றும் ஜப்பான் இடையிலான நீண்டகால நட்புறவை மேலும் உறுதிப்படுத்தும் ஒரு தளமாக இந்த நிகழ்வு அமைந்தது.





# மதவாச்சியில் பஸ் மோதி பெண்ணொருவர் மரணம்!

## சாரதியும் உதவியாளரும் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம் – ஏ – 9 பிரதான வீதியின் மதவாச்சி நகரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று, பாதசாரியான பெண் மீது மோதியதில் இவ்விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான அந்தப் பெண், உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட



போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. அவரது அடையாளம் மற்றும் விவரங்களைக் கண்டறியும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

விபத்து நிகழ்ந்த உடனே, அந்த பஸ்ஸின் சாரதியும் அவரது உதவியாளரும் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

அவர்களைக் கைது செய்வதற்காக மதவாச்சி பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.






# கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா இன்று ஆரம்பம்

## சகல ஏற்பாடுகளும் தயார்

(ந.லோகதயாளன்)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கோலாகலமாக ஆரம்பமாகவுள்ளது.

திருவிழாவை முன்னிட்டு ஆலயமும் அதன் சுற்றுப்புறச் சூழலும் முழுமையாகத் தயார்படுத்தப்பட்டுள்ளன.



இந்தத் திருவிழா ஏற்பாட்டுப் பணிகளுக்காகப் பங்குத்தந்தையர்கள், கடற்படையினர், பிரதேச செயலக மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதாரத் துறை அதிகாரிகள் என 500 இற்கும் மேற்பட்டோர் கச்சதீவில் தங்கியிருந்து அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றனர். பக்தர்களின் வருகைக்காகப் போக்குவரத்து, குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில், இன்று மாலை கொடியேற்றத்துடன் திருவிழா நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன.



# பலகட்சி ஆட்சிமுறையை அழிப்பதற்கு நடவடிக்கை

## ரணில் பரபரப்புக் குற்றச்சாட்டு

பலகட்சி ஆட்சிமுறையை இலங்கையில் இருந்து அழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டினார்.

தேசிய மக்கள் சக்தி அரசின் செயற்பாடுகள் தொடர்பில், எதிர்க்கட்சிகள் இணைந்து நேற்றுமுன்தினம் கூட்டுக் கலந்துரையாடலை நடத்தியிருந்தன. இதன்போதே, "பல கட்சி ஆட்சிமுறைக்கு இலங்கையில் ஆபத்து ஏற்பட்டுள்ளது. ஜனநாயகத்தை நிலைநிறுத்த கடுமையாகப் போராட வேண்டும்." என்று ரணில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"நாட்டின் ஜனநாயகத் தத்துவங்களுக்கு ஒவ்வொரு நாளும் அச்சுறுத்தல் ஏற்படுகின்றது. வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் மகா சங்கத்தினர் அவமதிக்கப்படுகின்றனர். போலியான குற்றச்சாட்டுக்கள் மூலம் எதிர்க் கட்சிகளை அடக்கி ஒடுக்கும் செயற் பாடுகளும் இடம்பெறுகின்றன.

இத்தகைய செயற்பாடுகளை நாம் தீர்க்கமாக எதிர்க்க வேண்டும். நாட்டின் உறுதித்தன்மையை பாதுகாக்கவும், தேசிய பாதுகாப்பை மேம்படுத்தவும் எதிர்க்கட்சிகள் மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளையும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்கும்."

– என்றார்.

# இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாங்குளம், கிளிநொச்சி நீதிமன்ற வளாகங்களுக்கு விஜயம் செய்கிறார்.

நாளை கச்சதீவு திருவிழா சமயம் அங்கு சென்று வழிபாடு செய்யும் பிரதம நீதியரசர் நாளை மறுதினம் சாவகச்சேரி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், ஊர்காவல்துறை, மல்லாகம் நீதிமன்றங்களைப் பார்வையிட இருக்கிறார்.

திங்கட்கிழமையன்று முல்லைதீவு நீதிமன்றத்திற்கும் செவ்வாய்க்கிழமையன்று மன்னார் நீதிமன்றத்திற்கும் அவர் செல்வார் எனவும் தெரிகிறது.

நீதிமன்றங்களில் களஆய்வு மேற்கொள்ளும் பிரதம நீதியரசர், நீதிமன்றங்களில் சான்றுப் பொருள்களாக ஒப்படைக்கப்படும் பொது மக்களின் சொத்துக்கள் பாதுகாக்கப்படுகின்ற - பேணப்படுகின்ற - விவகாரம் குறித்து விசேட கவனம் செலுத்துவார் எனத் தெரிகின்றது.

★ ★ ★

சில சமயங்களில் சுயபிரலாபம் தவிர்க்க முடியாததாகி விடுகின்றது. தேவை கருதி, சந்தர்ப்பம் பொறுத்து சுய கதைகளையும் பேச வேண்டி இருக்கின்றது. அந்த வகையறாவைச் சேர்ந்ததுதான் இப்போது நான் சொல்லப் போகின்ற விடயம். அதற்காக வாசகர்கள் என்னை மன்னித்துக் கொள்வார்களாக.

நேற்று பெப்ரவரி 26 ஆம் திகதி. வழமை போல அதிகாலை 5 மணிக்கு நேற்றைய பத்திரிகைப் பணிகளை முடித்துக் கொண்டு தூக்கத்துக்குச் சென்றேன். காலை 7 மணி அளவில் ஒரு தொலைபேசி அழைப்பு whatsapp மூலம் வெளிநாட்டில் இருந்து வந்தது. தூக்க கலக்கத்தில் 'ஹலோ' என்றேன்.

வெளிநாட்டவர் ஒருவர் வெள்ளைக்கார ஆங்கிலத்தில் பேசினார். கேட்ட குரலாகவும் இருந்தது.

என் பெயரைக் குறிப்பிட்டு "பதினாறு (ஸிக்ஸ்டீன்)வயது இளைஞனுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள்" - என்றார் அவர்.

நான் குரலிலும் whatsapp இலக்கத்திலும் அவரை அடையாளம் கண்டு கொண்டேன்.

யுத்த காலத்தில் சுமார் ஒரு தசாப்த காலம் கொழும்பில் மேற்குலகத் தூதரகம் ஒன்றில் மிக முக்கியமான பதவியிலிருந்த ராஜதந்திரி அவர். இப்போது ஓய்வு பெற்று விட்டார். வயதாகி அந்திம காலத்தில் இருக்கின்றார் என்று நினைக்கின்றேன். நீண்ட காலத்தின் பின்னரான அழைப்பு இது.

"ஐயா... எனக்கு இன்று பிறந்த தினமும் இல்லை. எனது வயதும் பதினாறும் (ஸிக்ஸ்டீன்) இல்லை. எனக்கு வயது அறுபத்தியாறு (ஸிக்ஸ்டி ஸிக்ஸ்)" - என்றேன்.

அவர் சிரித்தார்.

"இன்றைய திகதியை மறந்து விட்டீர்களா? வெள்ளை வானில் கடத்தப்பட்டு மீண்டு வர மாட்டீர்கள் என்று நாங்கள் நிலைத்த சமயத்தில் நீங்கள் இரண்டாவது பிறப்பெடுத்தது இந்த நாளில்தான். அது நடந்து இன்று 16, 17 வருடங்கள் கடக்கின்றன" - என்று தமக்கே உரிய நளினமான ஆங்கிலத்தில் உணர்ச்சி நட்புடன் உரைத்தார் அந்த நண்பர்.

அப்போதுதான் அந்த விடயம் எனக்கு நினைவுக்கு வந்தது. சரியாக 17 ஆண்டுகளுக்கு முன்னர் 2009 பெப்ரவரி 26 ஆம் திகதி காலை 9 மணி அளவில்தான் கொழும்பு மவுண்ட்லவேனியா மஹிந்த மலர்ச்சாலையில் என் உறவினர் ஒருவரின் இறப்பு வீட்டில் நான் கலந்து கொண்டிருந்த போது, என் உறவினர்கள், குடும்பத்தவர்கள் என நூற்றுக்கும் அதிகமானோர் முன்னிலையில் வைத்து மிக மோசமாக நடத்தப்பட்டு, தாக்கப்பட்டு, கண்கள் கட்டப்பட்டு, கைகள் பின்னால் விலங்கிடப்பட்டு, உடைகள் களையப்பட்டு ஆயுத முனையில் வெள்ளை வானில் நான் கடத்தப்பட்டேன்.

அந்த விடயத்தையும், அதையொட்டி நிகழ்ந்த மிக மோசமான அனுபவங்களையும் நினைவில் மீண்டும் இரை மீட்பது மனப்பிறழ்வை தரும் என்ற அச்சத்தில் அவை குறித்து நான் மீண்டும் எண்ணிப் பார்ப்பதில்லை. ஆனாலும் நேற்று காலை என் மேற்குலக நண்பரின் அழைப்பு நேரத்துடன் நித்திரையை விட்டெழுப்பி அதனை நினைவூட்டி விட்டது.

"நீங்கள் கடத்தப்பட்ட செய்தி வெளியாகி, ஆறு, ஏழு மணித்தியாலங்களில் பின்னர் ஆஸ்திரேலிய தொலைக்காட்சி செய்தியாளர் ஒருவர் ஒளிபரப்பிய செய்தி விவரணத்தைக் கேட்டேன். அதைக் கேட்ட கணத்திலிருந்து நீங்கள் மீண்டும் உயிரோடு திரும்புவீர்கள், உங்களை சந்திக்க வாய்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையை நான் இழந்து விட்டேன். அந்த வகையில் நீங்கள் மீண்டு வந்தமை உங்களுக்கு ஒரு மறு பிறப்புத்தான். அந்த ரீதியில் இது உங்களின் இரண்டாவது வாழ்வுக்கான பிறந்த நாள்" - என்றார் அந்த மேற்குலகின் முன்னாள் ராஜதந்திரி.

ஆம். ஆஸ்திரேலியாவின் எஸ்.பி.எஸ். தொலைக்காட்சியின் செய்தியாளர் ஒருவர் 2009 பிப்ரவரி 25ஆம் திகதி (நான் கடத்தப்படுவதற்கு முதல் நாள்) கொழும்பில் 'சுடர் ஒளி'யில் என் ஆசிரியர் பீட அலுவலகத்துக்கு வந்து என்னைப் பேட்டி கண்டார்.

"உங்கள் நண்பர் லஸந்த விக்கிரமதுங்க அண்மையில் கொல்லப்பட்டு விட்டார். அந்தக் கதி உங்களுக்கும் நேரும் என்ற அச்சம் உங்களுக்கு இல்லையா?" - என்ற சாரப்பட அவர் கேட்டார்.




"'ஆம். அப்படியான அச்சுறுத்தல்கள், நெருக்குதல்கள் எங்களுக்கு இருக்கின்றன. நாங்கள் வீட்டை விட்டுப் புறப்பட்டால் மீண்டும் உயிருடன் வீடு திரும்புவோமா என்ற உறுதிப்பாடு இல்லை. ஆயினும் இதுதான் என் மக்களுக்கு நான் பணியாற்ற வேண்டிய சமயம். நானும் எனது நிறுவனமும் அதில் உறுதியாக இருக்கிறோம்." - என்று நான் அவருக்கு பதில் கூறுகிறேன்.

தொடர்ந்து அவரது செய்தி இவ்வாறு அமைகிறது:-

"நான் 'உதயன்', 'சுடர் ஒளி' ஆசிரியரை பேட்டி கண்ட பின்னர், அடுத்த நாள் காலையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்திப்பதற்காக பாது காப்பு அமைச்சுக்குச் சென்று கொண்டு இருந்தேன். அப்போதுதான் 'உதயன்', 'சுடர்ஒளி' ஆசிரியரை கடத்திவிட்டார்கள் என்று செய்தி எனக்கு கிடைத்தது. நான் பாதுகாப்புச் செயலாளரைச் சந்தித்ததும் முதல் கேள்வியாக அதனை கேட்டேன். அந்தக் கேள்வியைக் கேட்டதும் அவருக்கு வந்த கோபம் எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது" - என்று அந்தச் செய்தியாளர் கூறுகிறார்.

தொடர்ந்து என்னைப் பற்றி கோபத்துடன் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய சத்தமிடுவதும் அந்த செய்தி விவரணத்தில் இடம் பெறுகிறது.

"பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என்ற முறையில் அந்தப் பத்திரிகையாளர் ஒரு 'பயங்கரவாதி' என்பதை நான் பொறுப்புடன் கூறுகிறேன். அவரை நீங்கள் யாராவது காப்பாற்ற முற்பட்டால் உங்கள் கைகளிலும் இரத்தம் இருக்கின்றது என்று அர்த்தம். அப்படி காப்பாற்ற முற்படுவோரையும் கைது செய்வேன்." என்ற சாரப்பட கோட்டாபய ராஜபக்ஷ சீற்றத்துடன் கத்துவதை அந்தச் செய்தி விவரணம் படம் பிடித்துக் காட்டுகிறது.

அது பற்றி வாசகர்கள் அறிவதற்காக அந்தச் செய்தி விவரண வீடியோப் பதிவை இணைத்துள்ளேன். அதில் ஆங்கில உரையாடலுக்கு தமிழில் அடிக்குறிப்பு உள்ளது. அதைக் கேட்டு அல்லது வாசித்து உண்மை நிலைவரத்தை வாசகர்கள் ஓரளவுக்கு அறிந்து கொள்ள முடியும்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த தடுப்பு காவல் உத்தரவுக்கு அமைய இரண்டரை மாதங்களுக்கு மேல் என்னைத் தடுத்து வைத்திருந்த இலங்கையின் நான்கு புலனாய்வுப் பிரிவுகளும் எனக்கு எதிரான விடயங்களைத் துருவித் துருவி விசாரித்தன. என்னுடைய வங்கிக் கணக்குகள், என்னுடைய வெளிநாட்டுப் பயணங்கள், என்னுடைய தொலைபேசி அழைப்புகள், புலிகளுடனான என்னுடைய ஊடாட்டம் பற்றி எல்லாம் அக்கு வேறு ஆணிவேறாகப் புலனாய்வு செய்த அவர்களால், எனக்கு எதிராக எந்தக் குற்றச்சாட்டையும் சுமத்த முடியாத பின்னணியில், நீதிமன்றில் என்னை முன்னிலைப்படுத்தி விடுவிக்கும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டார்கள்.

அத்தோடு அந்த நெருக்குவாரம் ஓரளவுக்கு முடிவுக்கு வந்தது என்று கூறலாம்.

அதன் பின்னர் நல்லாட்சி அரசின் காலத்தில் பதவி ஏதுமின்றி வீட்டில் ஒதுங்கி இருந்த கோட்டாபய ராஜபக்ஷ, அச்சமயம் தம்முடைய இல்லத்துக்கு என்னை அழைத்து, தேநீர் உபசாரம் வழங்கி, நட்புறவோடு உரையாடி, தாம் அரசியலுக்கு வந்தால் களநிலை எப்படி இருக்கும், தமிழர்கள் எப்படிப் பிரதிபலிப்பு காட்டுவார்கள் என்றெல்லாம் என்னிடம் விசாரிப்பது கூட நடந்தது.

யுத்த காலத்திலும், பின்னரும், எதிரெதிர் நிலையில், கருத்து மோதலோடு, அவரைப் பல தடவைகள் எனக்குச் சந்திக்க வாய்ப்பு கிடைத்ததாயினும், அவர் ஜனாதிபதியான பின்னர் அவரோடு பேசக்கூட எனக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை.

என்றோ ஒரு நாள் மீண்டும் அவரைச் சந்திக்கக் கிடைத்தால் அவரிடம் கேட்க வேண்டிய சில கேள்விகள் என்னிடம் உள்ளன. வாய்ப்புக் கிடைத்தால் கேட்டு, பதிலை வாசகர்களுக்கு பகிர்வேன் அவையும் பரபரப்பாக இருக்க கூடும் என்று நம்புகிறேன்.

# வெளிநாட்டுப் பெண்ணொருவருக்கு தொல்லை கொடுத்த இளைஞர் கைது

கொழும்பு புறக்கோட்டை பிரதான வீதியில் நேற்று காலை வெளிநாட்டுப் பெண் ஒருவரை வலுக்கட்டாயமாகப் பின்தொடர்ந்து, அவரது அந்தரங்கப் பகுதிகளைத் தனது அலைபேசியில் காணொலியாகப் பதிவு செய்ய முயன்ற இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

போக்குவரத்து கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், இந்த ஒழுக்கமற்ற செயலை உடனடியாகக் கவனித்து சந்தேகநபரை மடக்கிப் பிடித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 24 வயதுடைய மீரிகம பிரதேசத்தைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். மேற்படி இளைஞர் பெண்ணுக்குத் தொல்லை கொடுப்பதும், தொலைபேசியில் காணொலி பதிவை மேற்கொள்வதும் அங்கிருந்த சி.சி.டி.வி. கமராவில் தெளிவாகப் பதிவாகியுள்ளது.

---

## சுரேஷ் சலேயின் கைது வெறும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

“அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேயின் கைது நடவடிக்கையானது, கத்தோலிக்க திருச்சபையையும் ஈஸ்டர் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களையும் ஏமாற்றுவதற்காக அரசு ஆடிய ஒரு நாடகமாகும். தற்போது விவசாயிகளின் பிரச்சினைகள் மற்றும் நிலக்கரி மோசடிப் புகார்களில் சிக்கியுள்ள அரசு, மக்களின் கவனத்தைத் திசைதிருப்பவே இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

2018ஆம் ஆண்டில் சுரேஷ் சலே, சஹ்ரானைச் சந்தித்தார் என்று சுமத்தப்படும் குற்றச்சாட்டு முற்றிலும் அடிப்படையற்றது. அந்தக் காலப் பகுதியில் சுரேஷ் சலே இலங்கையில் இருக்கவில்லை. அவர் மலேசியாவிலும் இந்தியாவிலும் தூதரகப் பணிகளில் ஈடுபட்டிருந்தார்.

சனல் 4 ஊடகம் வெளியிட்ட தகவல்கள் நம்பகத்தன்மை அற்றவை என்பதை ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட குழுவும் ஏற்கனவே உறுதிப்படுத்தியுள்ளது.

நாட்டின் சிறந்த புலனாய்வு அதிகாரிகளில் ஒருவரான சுரேஷ் சலேவைச் சிறையில் அடைத்துவிட்டு, தாக்குதலுக்கு நிதியுதவி செய்தார் என்று கருதப்படும் இப்ராஹிம் போன்றவர்களைச் சுதந்திரமாக நடமாடவிடுவது எந்த வகையில் நியாயமானது? உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரி நௌபர் மௌலவி என்பது தெளிவாகத் தெரிந்திருந்தும், அரசியல் காரணங்களுக்காக அதிகாரிகள் வேட்டையாடப்படுவது கண்டிக்கத்தக்கது.” – என்றார்.

---

## சுரேஷ் சலேயின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே கைது செய்யப்பட்டமையானது முற்றிலும் ஓர் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை என விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் முக்கியஸ்தரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜயந்த சமரவீர இக்கருத்துக்களை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“இந்த அரசு ட்சிக்கு வந்தது முதல், நாட்டைப் பாதுகாத்த இராணுவ வீரர்களையும் புலனாய்வு அதிகாரிகளையும் இலக்கு வைத்துச் செயற்பட்டு வருகின்றது. ஈஸ்டர் தாக்குதலின் உண்மையான குற்றவாளிகளைக் கண்டறிவதற்குப் பதிலாக, சர்வதேச அளவில் அங்கீகாரம் பெற்ற ஒரு புலனாய்வு அதிகாரியைச் சிறையில் அடைப்பதன் மூலம் அரசு தனது குறுகிய அரசியல் நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்து வருகின்றது.

தற்போதைய அரசு தமிழ் புலம்பெயர் அமைப்புகளின் அழுத்தங்களுக்குப் பணிந்து, அவர்களின் ஒப்பந்தங்களை நிறைவேற்றும் ஒரு கருவியாக மாறியுள்ளது. இலங்கையில் பயங்கரவாதத்தை ஒழிப்பதில் முக்கிய பங்காற்றிய அனுபவம் வாய்ந்த அதிகாரிகளை இவ்வாறு வேட்டையாடுவது, நாட்டின் ஒட்டுமொத்தப் பாதுகாப்பு கட்டமைப்பையும் சீர்குலைக்கும் செயலாகும்.

சுரேஷ் சலே மீதான குற்றச்சாட்டுகள் எவ்வித ஆதாரமும் அற்றவை. 2019ஆம் ஆண்டு தாக்குதல் நடைபெற்ற காலகட்டத்தில் அவர் வெளிநாட்டில் தூதரகப் பணியில் இருந்தார் என்பது உறுதிப்படுத்தப்பட்ட உண்மையாகும். அரசு தனது பொருளாதாரத் தோல்விகளையும், மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியமையையும் மறைக்கவே இத்தகைய கைது நாடகங்களை அரங்கேற்றுகின்றது.

இக்கைது நடவடிக்கையானது தற்போதைய புலனாய்வுப் பிரிவினரிடையே ஒருவித அச்சத்தை உருவாக்கியுள்ளது. இது எதிர்காலத்தில் நாட்டின் தேசிய பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமையும்.

ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதியைப் பெற்றுத் தருவதாகக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், தற்போது அரசியல் எதிரிகளைப் பழிவாங்குவதிலேயே குறியாக உள்ளனர். இத்தகைய அடக்குமுறைகளுக்கு எதிராக எமது கட்சி தொடர்ச்சியாகக் குரல் கொடுக்கும்.” – என்றார்.

---

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் மிகுந்த முனைப்புடன் கலந்துகொள்ள வேண்டும் எனவும் அவர் விடுத்துள்ள விசேட அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

“பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும் என்பதே எமது நீண்டகாலக் கோரிக்கையாகும். இதனை வலியுறுத்திக் கையெழுத்துப் போராட்டங்கள் உட்பட நாடளாவிய ரீதியில் பல்வேறு போராட்டங்களை நாம் நீண்டகாலமாக முன்னெடுத்து வந்துள்ளோம்.

இந்நிலையில், தற்போதுள்ள சட்டத்துக்கு மாற்றீடாக ‘அரசைப் பயங்கரவாதத்தில் இருந்து பாதுகாக்கும் சட்டமூலம்’ என்ற பெயரில் புதிய சட்டமொன்றை இயற்றுவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளை நாம் வன்மையாக எதிர்க்கின்றோம். இப்புதிய சட்டமூலம் எக்காரணம் கொண்டும் நிறைவேற்றப்படக் கூடாது என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.

எனவே, இந்தச் சட்டங்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் அனைத்துப் போராட்டங்களிலும் எமது கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவரும் மிகுந்த முனைப்புடன் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.” – என்றுள்ளது.

அரசின் புதிய சட்ட முயற்சிகள் ஜனநாயக விழுமியங்களுக்கு அச்சுறுத்தலாக அமையும் எனப் பல்வேறு தரப்பினரும் கருத்து வெளியிட்டு வரும் நிலையில், தமிழரசுக் கட்சியின் இந்தப் பகிரங்க அழைப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.

---

## நாமலின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:–

“ஒக்ஸ்போர்ட் ஒன்றியத்தின் அழைப்பின் பேரில் நாமல் ராஜபக்ஷ அங்கு சென்றிருந்தபோது, அவருடன் விவாதிப்பதற்கும் கேள்விகளை எழுப்புவதற்கும் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. இருப்பினும், தமது பாதுகாப்பைக் காரணம் காட்டி, அவர் முன்னால் நேரடியாகக் கேள்வி கேட்கத் தம்மால் முடியாது எனத் தமிழ் மாணவர் அமைப்புகள் தெரிவித்துள்ளன. இதன் மூலம் நாமல் ராஜபக்ஷவின் ஆளுமைக்கு முன்னால் முதுகெலும்புடன் நின்று பேச இவர்களுக்குத் திராணியில்லை என்பது உறுதியாகியுள்ளது.

சுதந்திரமான பேச்சு மற்றும் விவாதங்களுக்குப் புகழ்பெற்ற இத்தகைய சர்வதேச பல்கலைக்கழகங்கள், பிரிவினைவாத தமிழ் மாணவர் அமைப்புகளின் அழுத்தங்களுக்குப் பணிந்து தமது மரபுகளைக் கைவிட்டமை வருத்தத்திற்குரியது. இவ்வாறான சக்திகளின் அழுத்தங்களுக்குப் பணியாமல், ஒக்ஸ்போர்ட் மற்றும் கேம்பிரிட்ஜ் போன்ற நிறுவனங்கள் எதிர்காலத்தில் தமது கொள்கைகளை உறுதிப்பட நிலைநாட்ட வேண்டும்.

தற்போதைய அரசு புலம்பெயர் தமிழ் அமைப்புகளைத் திருப்திப்படுத்துவதற்காகவே செயற்படுகின்றது. ‘டயஸ்போரா’வுக்கு நோகும் என்பதாலேயே ஜனாதிபதி இன்று ‘ரணவிருவா’ (இராணுவ வீரர்கள்) என்ற சொல்லைப் பயன்படுத்துவதில்லை. சுதந்திர தினத்தில் இராணுவத் தளபாடங்களைக் காட்சிப்படுத்தாமைக்கும் இதுவே காரணமாகும்.

சர்வதேச மற்றும் உள்நாட்டுச் சூழ்ச்சியாளர்களின் அழுத்தங்களுக்கு அடிபணியாமல், மஹிந்த ராஜபக்ஷ போரை வென்று ஈழக் கனவைத் தகர்த்த காரணத்தினாலேயே, ராஜபக்ஷ குடும்பத்தின் மீது சர்வதேசமும் டயஸ்போராவும் இன்றும் தீராத வைராக்கியம் கொண்டுள்ளன.” – என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இதுதான் அவல நிலை!

தற்போது நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் மற்றும் அரசால் அதற்கு மாற்றீடாக கொண்டு வரப்படும் ‘அரசைப் பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்கும் சட்டம் மூலம்’ ஆகியவற்றுக்கு எதிராக நிகழ்த்தப்படும் சகல போராட்டங்களிலும் முனைப்புடன் பங்குபற்றுமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவரையும் கட்சியின் சார்பில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்று, அதை நீக்குவதற்கான கையெழுத்துப் போராட்டம் உட்பட நாடளாவிய ரீதியில் பல போராட்டங்களை தங்களின் தமிழரசுக் கட்சி நீண்ட காலமாக முன்னெடுத்து வருகின்றது என்பதை அவர் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

உண்மைதான். நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை மாற்றீடு இன்றி முழுமையாக நீக்க வேண்டும் என்பதற்காக நீண்ட காலமாகத் தமிழரசுக் கட்சி போராடி வருகிறது. யுத்தம் முடிவடைந்த காலத்தில் இருந்து இது மேலும் முனைப்புப் பெற்றுத் தொடர்கின்றது.

இலங்கைத் தமிழர்கள் மத்தியில் பிரதான தரப்பு தமிழரசுக் கட்சிதான். அது மாத்திரமில்லாமல், தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தி நிற்கின்ற அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை அடியோடு நீக்க வேண்டும் என்பதில் ஒன்றுபட்டுக் குரல் எழுப்பி வருகின்றன என்பதும் மறுக்க முடியாத உண்மை.

நல்லாட்சி அரசின் காலத்தில் இந்த முயற்சியில் ஒரு கட்டமாக மாற்றீட்டுச் சட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டது. அதேபோன்று பின்னாள்களிலும் பிறிதொரு சட்ட மூலம் அறிமுகப்படுத்தப்பட்டதும் தெரிந்துதான்.

ஆயினும், ஒவ்வொரு தடவையும் நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கு மாற்றீடான சட்டம் என்ற பெயரில், மிக மோசமான, நடைமுறையில் இருப்பதைவிட கொடூரமான, குரூரமான சட்ட வரைவுகளை தென்னிலங்கை ஆட்சி பீடங்கள் மாறி மாறிக் கொண்டு வருகின்றன. அப்படி மோசமான சட்ட வரைவுகளைக் கொண்டு வருவதன் காரணமாக, அவற்றுக்குக் கிளம்பும் எதிர்ப்பைக் காட்டி, நடைமுறையில் இருக்கின்ற பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை அப்படியே தொடர சிங்கள ஆட்சிப் பீடங்கள் விரும்புகின்றன. இருக்கின்ற சட்டத்தைவிட மோசமான சட்ட வரைவை மாற்றீட்டுச் சட்டமாக கொண்டு வருவதன் மூலம், அந்த மாற்றீட்டு சட்டத்துக்குக் கிளம்பும் எதிர்ப்பை வைத்துக்கொண்டு, இருக்கின்ற சட்டத்தை அப்படியே தொடரலாம் என்ற தந்திரோபாயம்தான் சிங்கள ஆட்சிப் பீடத்தால் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் சுட்டிக்காட்டுவது உண்மையான விடயம்தான்.

நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கும்படி கோரி நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை முழுவதும் கையெழுத்துப் போராட்டத்தை தமிழரசுக் கட்சி முன்னெடுத்த போது இருக்கின்ற சட்டம் மாற்றீடின்றி நீக்கப்பட வேண்டும் என்ற வலியுறுத்தலோடு அந்தப் போராட்டத்தில் முழு அளவில் சேர்ந்து பங்காற்றியது ஜே.வி.பி யையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தி. அந்தக் கருத்தையே அதன் தலைவர் அநுரகுமார திஸநாயக்கவும் அப்போது திட்டவட்டமாகவும் தெளிவாகவும் உறுதியாகவும் வெளிப்படுத்தி இருந்தார். ஆனால் அவர் ஜனாதிபதியாகி, அவரது அரசு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப் பலத்தோடு அதிகாரத்துக்கு வந்த பின்னர், இருக்கின்ற சட்டத்தை விட மோசமான சட்டம் ஒன்றை மாற்றீட்டுச் சட்ட வரைவாகக் கொண்டு வரும் அலங்கோலம் இங்கு அரங்கேறுகிறது. இதுதான் இலங்கையின் அவல நிலைமை...!

# மத்திய மாகாணக் கல்வி அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நேற்று













**(மஸ்கெலியா விசேட நிருபர்)**

மத்திய மாகாண சபை, கல்வி அமைச்சு மற்றும் அதன் துணை நிறுவனங்கள் 2026ஆம் ஆண்டுக்காக செயல்படுத்திய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான சிறப்பு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நேற்று மத்திய மாகாண சபை வளாகத்தில் நடைபெற்றது.

நுவரெலியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மஞ்சுள சுரவீராராச்சி, கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தனுர திசாநாயக்க மற்றும் மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் ஹேமந்த ஆகியோரின் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

ஒருங்கிணைந்த அணுகுமுறையின் மூலம் திட்டங்களைத் திட்டமிடுதல், அரசாங்கத்தின் தூய்மையான இலங்கை கொள்கை மற்றும் பிரஜா சக்தி திட்டத்திற்கு ஏற்ப ஒருங்கிணைந்த அணுகுமுறையின் மூலம் திட்டங்களை செயல்படுத்துதல் ஆகியவை சிறப்பு கவனம் செலுத்தப்பட்டன. மத்திய மாகாணத்தில் 15 பள்ளி மைதானங்களை நிர்மாணிப்பதன் அவசியம், மாகாணத்தில் பள்ளி நிலப் பிரச்சினைகளைத் தீர்ப்பது, புதிய சுற்றுலாத் திட்டங்களை செயல்படுத்துதல், உள்ளூராட்சி நிறுவனங்களில் பொது பிரதிநிதிகள் மற்றும் அரசு அதிகாரிகள் எவ்வாறு செயல்பட வேண்டும், உள்ளூராட்சி நிறுவனங்களில் தொழில்நுட்ப அதிகாரிகள் எதிர்கொள்ளும் நடைமுறை சிக்கல்கள் மற்றும் அதிகாரிகள் பற்றாக்குறை குறித்து சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடல்கள் மத்திய மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் மேயர்கள் மற்றும் தலைவர்கள், கல்வி முதன்மைச் செயலாளர் திருமதி மதுபானி பியசேன, துறைத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளின் பங்கேற்புடன் நடைபெற்றன.

# தமிழ் மக்களுக்காக அகிம்சை வழியில் போராட்டங்களை முன்னெடுத்த நல்லகண்ணுவின் மறைவுக்கு இரங்கல்

## தமிழ்த் தேசியப் பேரவை சார்பில் கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு





(பூ.லின்ரன்)

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் புகழ்பூத்த மூத்த பெரும்தலைவர் தோழர் இ.நல்லகண்ணுவின் மறைவுக்கு தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. இரங்கல் தெரிவித்துள்ளார்.

“செஞ்சூரியன் தோழர் நல்லகண்ணு ஐயாவுக்கு ஈழத்தமிழர்களின் செவ்வஞ்சலி“ என்ற தலைப்பில் அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் புகழ்பூத்த மூத்த பெரும்தலைவர் தோழர் இ.நல்லகண்ணு ஐயா அவர்கள் தனது 101 ஆவது வயதில் தனது மூச்சை நிறுத்திக் கொண்டார் என்ற செய்தி ஈழத் தமிழ் மக்களைப் பெரும் துயரில் ஆழ்த்தியுள்ளது.

2009-ஆம் ஆண்டு தமிழ்த் தேசத்திற்கு எதிராக ஶ்ரீலங்கா அரசு (Srilanka State) ஈவிரக்கமற்ற யுத்தத்தை நடத்தித் தமிழினப் படுகொலையை நிகழ்த்திக் கொண்டிருந்தபோது தமிழகம் அதற்கெதிராகக் கொந்தளித்தது. அப்போது, தமிழகத்தின் பல்வேறு கட்சிகளையும் ஒருங்கிணைத்து மக்களை ஒன்று திரட்டிப் பெரும் போராட்டங்களை நடத்திய “இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தை“ தோற்றுவித்ததில் நல்லக்கண்ணு ஐயா ஆற்றிய பங்கு அளப்பரியது. அதுமட்டுமல்லாது, ஐதராபாத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாடு நடைபெற்றபோது ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகத் தீர்மானம் நிறைவேற்றியதில் முன்னின்று உழைத்த பெருமகனார் நல்லக்கண்ணு ஐயாவை நாம் இன்று கனத்த இதயத்துடன் நினைவிற் கொள்கிறோம்.

அரசியல் அடக்குமுறைகளுக்கும், பெரும் பண்ணையார்களின் குடியானவர்கள் மீதான ஒடுக்குமுறைகளுக்கும், சாதியத் தீண்டாமைகளுக்கும் எதிராக எண்ணற்ற பெரும் போராட்டங்களை முன்னின்று நடத்தியமைக்காக ஏழு ஆண்டுகாலம் கொடும் சிறைவாசம் அனுபவித்தவர். சிறைவாசம் அவரது கொள்கை உறுதியை மேலும் புடம் போட்டது. விடுதலையான பின்பு முன்பை விட சமத்துவ சமுதாயம் காண்பதற்கு வேகமாகவும் தீவிரமாகவும் அவர் களப்பணியாற்றியதை உலகத் தமிழர்கள் என்றும் நினைவிற் கொள்வார்கள்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளராக ஒருவர் இரண்டு முறை மட்டுமே பொறுப்பு வகிக்க முடியும். ஆனால், நல்லக்கண்ணு ஐயாவின் நேர்மை, எளிமை, உறுதி, தன்னலமற்ற தியாக வாழ்வு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு கட்சியின் சட்டவிதியை அகில இந்திய மாநாடு திருத்தியமைத்து அவர் நான்கு முறை பதவி வகிக்க வைத்தது. கட்சியும் மக்களும் அவர் மீது பேரன்பு கொண்டிருந்த நிலையில் அவரால் இந்திய நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டுப் பெரும் பதவிகளைக் கூடப் பெற்றிருக்க முடியும். ஆனால் பதவிகளை பெற்றிடவிரும்பாத பெருந்தகையாளராக வாழ்ந்து மறைந்தார்.

இந்திய மக்களை மாத்திரமல்லாமல் ஈழத்தமிழர்களையும் நெஞ்சிருத்தி வாழ்நாள் பூராவும் செஞ்சூரியனாக ஒளிர்ந்த நல்லணக்கண்ணு ஐயாவுக்கு தமிழ்த் தேசியப் பேரவையினராகிய நாம் ஈழத் தமிழ் மக்களின் சார்பில் எமது செவ்வஞ்சலியைச் சிரந்தாழ்த்தித் தெரிவித்துக் கொள்கிறோம். - என்று உள்ளது.

# தனியார் கல்வி நிலையங்களின் செயற்பாடுகள் மட்டு. மாநகரத்தில் 2 வாரங்கள் இடைநிறுத்தம்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாநகரசபை எல்லையினுல் இரு வாரங்கள் தனியார் கல்வி நிலைய செயற்பாடுகளை நிறுத்துமாறு மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் சிவம் பாக்கியநாதன் நேற்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நடந்து முடிந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கு ஓய்வை வழங்கும் வகையில் அவர்களுக்கான கற்றல் செயற்பாடுகளை இரு வாரங்கள் தனியார் கல்வி நிலையங்களில் மேற்கொள்ள வேண்டாம் என அவர் தெரிவித்துள்ளார்.



மேலும் தனியார் கல்வி நிலையங்களின் சுகாதார வசதி மற்றும் ஒழுங்குகள் கற்றல் செயற்பாடுகளுக்கு ஏற்றவகையில் காணப்படுகின்றமை மாநகர சபையினால் உறுதி செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இவ் அறிவுறுத்தலை கடைப்பிடிக்காத தனியார் கல்வி நிலையங்களுக்கு எதிராக மாநகர சபை கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# மட்டக்களப்பில் யானை – மனித மோதல்களுக்கு மகாவலி அபிவிருத்தி அதிகார சபையே காரணம்

## சீற்றத்துடன் குறிப்பிடுகின்றார் சாணக்கியன் எம்.பி.

யானை – மனித மோதல் அதிகரித்து வருவதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று மகாவலி அபிவிருத்தி அதிகார சபையினால் முன்னெடுக்கப்படும் நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக காடுகள் அழிக்கப்பட்டு வருவதாகும் என்று மண்முனை மேற்கு – வவுணதீவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டியிருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்.

மண்முனை மேற்கு – வவுணதீவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. அங்கேயே இந்த விடயத்தை அவர் சுட்டிக் காட்டினார்.

மகாவலி அதிகார சபையினால் முன்னெடுக்கப்படும் நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றமையால் காடுகளில் வாழ்ந்த யானைகள் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைந்து மக்களின் உயிருக்கும் சொத்துக்களுக்கும் பெரும் சேதத்தை ஏற்படுத்தும் நிலை அதிகரித்துள்ளது.

மகாவலி திட்டத்தின் மூலம் தண்ணீர் வருகிறதா இல்லையா என்பது இன்னும் கேள்விக்குறியாக இருக்கலாம். ஆனால் யானைகள் வருவது மட்டும் நிச்சயம். சமீபத்தில் வாழைச்சேனையில் இடம்பெற்ற சம்பவம் இதற்கு தெளிவான சான்றாக உள்ளது.

இத்தகைய பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வந்தாலும், மக்களுக்கு தேவையான முக்கிய பிரச்சினைகளுக்கு இதுவரை தீர்வு எட்டப்படாதமை கவலைக்கிடமானது. மக்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. – என்று குறிப்பிட்டார் சாணக்கியன் எம்.பி.

(அவரின் உரையை இத்துடன் உள்ள இணைப்பில் நேரடியாகக் கேட்கலாம்)





# உள்ளூராட்சி சபைகள் அறவிடும் வற் வரியை அந்தந்தச் சபைகளுக்கு விடுவிக்க முடியாது!

## யாழ் மாநகர சபையின் கோரிக்கை ஆளுநரால் நிராகரிப்பு

**(ந.லோகதயாளன்)**

உள்ளூராட்சி சபைப் பிரதேசங்களில் அவற்றினால் அறவிடப்படும் வற் வரியை அந்தந்த உள்ளூராட்சி சபைகளிற்கே விடுவிக்குமாறு யாழ். மாநகர முதல்வர் விடுத்த கோரிக்கை ஆளுநரால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் நிதி நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்காக உள்ளூராட்சி சபைகள் அடுத்த மூன்று வருடங்களுக்குள் தங்கள் ஊழியர்களின் சம்பளத்தைத் தத்தமது சபைகளின் வருமானத்தில் இருந்தே வழங்கக்கக் கூடிய வகையில் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படுகின்றமையைச் சுட்டிக் காட்டியுள்ள யாழ். மாநகர முதல்வர், அந்தக் காணத்தினால் உள்ளூராட்சி சபைகள் மூலம் கிடைக்கும் வற் வரியை அந்தந்த சபைகளிற்கே விடுவிக்க வேண்டும் என யாழ்ப்பாணம் மாநகர சபையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அதற்கு உரிய தீர்வை பெற்றுத் தருமாறு வடக்கு மாகாண ஆளுநருக்கு எழுத்தில் விண்ணப்பித்திருந்தனர்.

இந்தக் கோரிக்கையை பரிசீலித்த ஆளுநர் “பெறுமதி சேர் வரி விவகாரம் தேசிய ரீதியான கொள்கைத் தீர்மானத்திற்கு உட்பட்டதாக அமைந்துள்ளமையால் சாதகமாக பரிசீலிக்கப்படவில்லை” எனத் தமது செயலாளர் மூலம் மாநகர சபைக்கு பதில் அனுப்பி வைத்துள்ளார்.

# பயங்கரவாதத் தடைச் சட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையில் கண்டனத் தீர்மானம்






பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டமும் வேண்டாம், புதிதாகக் கொண்டு வரப்படுகின்ற அரசைப் பாதுகாக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டமும் வேண்டாம் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அரசினால் கொண்டுவரப்படவுள்ள அரசைப் பாதுகாக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக நேற்று பிரதேச சபையின் மாதாந்த அமர்வில் தவிசாளர் தியாகராஜா நிரோஷினால் பிரேரணை முன்வைக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பது இந்நாட்டில் மக்களை ஒடுக்குகின்றது. – மனித உரிமைகளை நிராகரிக்கின்ற – காட்டுமிராண்டிச் சட்டம். அச் சட்டம் உள்ளிட்ட மக்களை ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்குகின்ற சட்டங்களை நீக்கவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம், இன்று புதிய வடிவத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை முன்வைக்கின்றது. அடிப்படையில் இந் நாட்டில் பயங்கரவாதத் தடைச்சட்டதினால் தமிழ் மக்கள் சொல்லெணாத் துயங்களை எதிர்கொண்டுள்ளனர். பயங்கரவாதத் தடைச்சட்டம் 1978 ஆம் ஆண்டிலிருந்து எம்மை ஒடுக்குவதற்காக மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்களால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளது. பொலிஸாருக்கும் இராணுவத்திற்கும் அதிக அதிகாரங்களை வழங்குதல் மற்றும் சித்திரவதைகள் ஊடாக குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களைப் பெறுதல், விசாரணையின்றித் தடுத்துவைத்தல் என அதிகமான அதிகாரங்களை குவித்துள்ள கீழ்த்தரமான சட்டமாகும் இது. இனப்பிரச்சினையுள்ள நாட்டில் இனம்சார் எதிர்ப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்தவதற்கு அரசாங்கத்திற்கு சட்ட அங்கீகாரமளித்துள்ளது.

பயங்கரவாதம் என்ற வரைவிலக்கணத்திற்கு பரந்த அளவில் பொருள் கோடல் வழங்க புதிய சட்டம் முயற்சிக்கின்றது. ஜனநாயக ரீதியிலான போராட்டங்கள், ஊடக சுதந்திரம் போன்றவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் , கைது செய்பவர்களை நீதிமன்றங்களின் முன் நிறுத்தாமல் தடுத்து வைப்பதற்குமான சந்தர்ப்பங்களை இது வழங்குகின்றது. இந் நிலையில் எமது மக்கள் பிரதிநிதிகள் சபை பயங்கரவாதத் தடைச்சட்டமும் வேண்டாம் மாற்றுச்சட்டமும் வேண்டாம் எனப் பிரேரணையை முன்வைக்கின்றது என்றார் தவிசாளர்.

பிரேரணை வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட நிலையில், தேசிய மக்கள் சக்தி தவிர்ந்த ஏனைய சகல உறுப்பினர்களும் அதற்கு ஆதரவு அளித்தனர். அதே வேளை தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் இருவர் சபையில் இருந்து வெளியேறியமையுடன் சபையில் பிரசன்னமாகியிருந்த ஏனைய தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர்.

இந் நிலையில் 25 வாக்ககளால் தேசிய மக்கள் சக்தி தவிர்ந்த ஏனைய சகல கட்சிகளினதும் ஆதரவுடன் இப்பிரேரணை நிறைவேறியது.

## மட்டக்களப்பு - திராய்மடு, பாலைமீன்மடு பிரதேசத்தில்

# கால்நடைத் திருடர்களைப் பிடித்துத் தந்தால் ரூ. 25,000 வெகுமதி எனப் பகிரங்க அறிவிப்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு திராய்மடு மற்றும் பாலைமீன்மடு பகுதிகளில் கால்நடை வளர்ப்பாளர்களின் மாட்டுபட்டிகளில் உள்ள 40 மாடுகளை இதுவரை திருடர்கள் திருடிச் சென்று இறைச்சியாக்கியுள்ளனர். எனவே இது போன்ற கால்நடை திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடுபவர்களைப் பிடித்து தருபவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா சன்மானமாக வழங்கப்படும் என பொதுமக்களுக்குப் பண்ணையாளர்கள் அறிவிப்பு விடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு"வொய்ஸ்ஒவ்மீடியா"நிறுவகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக மாநாட்டில் கால்நடைவளர்ப்பு பண்ணையாளரும், வர்த்தகரும், ஈ.பி.டி.பியின் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான அந்தனிசில் ராஜ்குமார் கலந்து கொண்டு இவ்வாறு அறிவித்தார்.

இந்தொ பிரதேசங்களில் பதிவு செய்யப்பட் 15 பேருக்கு மேற்பட்ட கால் நடை வளர்ப்பாளர்கள் மாடு மற்றும் ஆடுகளை ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர.

இந்த நிலையில் இந்தப் பகுதிகளில் நள்ளிரவில் சொகுசு வாகனங்களான கே.டி.எச். ரக வான், மூடிய பட்டா ரக லொறி, கார் போன்ற வாகனங்களின் திருடர்கள் மாடுகள், ஆடுகளைத் திருடி, ஏறாவூர் பகுதிகளுக்கு கொண்டு சென்று அதனை வெட்டி இறைச்சியாக்கி வருகின்றனர்.

இந்த கால்நடைத் திருட்டு தொடர்பாக கொக்குவில் பொலிஸாரிடம் பல தடவைகள் முறைப்பாடு செய்திருந்த போதும் இந்த திருட்டுக் கும்பலை இதுவரை கைது செய்யவில்லை. அதேவேளை கடந்த இரண்டு வருடத்திற்கு முன்னர் 4 மாடுகள் திருட்டுப் போன நிலையில் ஏறாவூர் பகுதியில் மாடு அறுக்கும் மடுவத்தில் இருந்து ஒரு மாட்டை இறைச்சிக்காக வெட்டிய நிலையிலும் 3 மாடுகளை உயிருடன் மீட்டமையுடன் அது தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் வழக்கு இடம்பெற்றுவருகின்றது .

அதேவேளை கடந்த சுதந்திர தினத்திற்கு முன்தினமான 3 ஆம் திகதி இரவு பட்டியில் இருந்த கன்றுதாய்சியான பசுமாடு உட்பட 4 மாடுகள் திருட்டுப் போயுள்ளன. இவ்வாறு நாளாந்தம் தொடர்ச்சியாக எங்களது மாடுகள் திருட்டுப் போகின்றன.

இவ்வாறு மாடுகள் திருடப்படுவதால் கால்நடைவளர்ப்பு மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே பொது மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம். இந்தக் கால்நடைத் திருட்டில் ஈடுபடுவர்களைக் கண்டால் அவர்களைப் பிடித்து தருபவர்களுக்குசன்மானமாக 25 ஆயிரம் ரூபா பணம் வழங்கப்படும். – என பாதிக்கப்பட்ட பண்ணையாளர்கள் சார்பில் அவர் அறிவித்தார்.



# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கும்படி வலியுறுத்தி சாவகச்சேரி நகரசபையிலும் தீர்மானம் நிறைவேறியது!

ஜனநாயகத்திற்கு விரோதமாகவும், அடிப்படை மனித உரிமைகளைக் கேள்விக்குள்ளாக்கும் வகையிலும் தற்பொழுதும் வலுவிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கோர முகத்தினை நேரடியாக அனுபவித்த மக்கள் என்ற அடிப்படையில், முன்மொழிப்பட்டுள்ளபயங்கரவாத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவை மீளப் பெறவும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவும், எந்தவொரு பயங்கரவாத் தடுப்புச் சட்டமும் தேவையில்லை எனக் குறிப்பிட்டும் சாவகச்சேரி நகரசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகராட்சி மன்றின் மாதாந்த அமர்வு நேற்றைய தினம் தவிசாளர் வ.ஶ்ரீபிரகாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது உபதவிசாளர் ஞா.கிஷோர் புதிய பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பான பிரேரணையை சபையில் முன்வைத்து உரையாற்றினார்.

இதன்போது தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சபை நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படாத இந்த விடயத்தை சபையில் பிரேரிக்க முடியாது என தமது எதிர்ப்பை வெளியிட்டனர். எனினும் தேசிய மக்கள் சக்தியின் 3 உறுப்பினர்கள் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்களின் ஆதரவோடு பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிரான பிரேரணை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

# பதுளையில் ஒன்றரை கோடி ரூபா மதிப்புள்ள 140 கிலோ கிராம் உலர்ந்த கஞ்சா சிக்கியது





(பசறை நிருபர்)

பதுளை, ஹல்துமுல்ல பகுதியில் நடத்தப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது சுமார் ஒன்றரைக் கோடி ரூபா மதிப்புள்ள 140 கிலோ கிராம் உலர்ந்த கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவிற்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், ஹல்துமுல்ல பொலிஸார், பண்டாரவளை பொலிஸ் குற்றப்பிரிவு மற்றும் பொலிஸ் சிறப்பு அதிரடிப்படை அதிகாரிகள் இணைந்து ஹல்துமுல்ல - இலுக்பலெஸ்ஸ வனப்பகுதியில் விசேட தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது, சாக்குகளில் அடைக்கப்பட்டு விற்பனைக்குத் தயாரான நிலையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 140 கிலோ கிராம் உலர்ந்த கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட செய்யப்பட்ட கஞ்சாவின் சந்தை மதிப்பு சுமார் ஒன்றரை கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹல்துமுல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் தகவல்கள் பின்னர் வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னார் நகரசபை மாதாந்த அமர்வு ஊடகங்களுக்கு அனுமதி இல்லை!

## செய்திகளுக்கு அஞ்சி நிர்வாகம் கதவடைப்பு



**(மன்னார் நிருபர்)**

மன்னார் நகர சபையின் 9 ஆவது மாதாந்த அமர்வு நேற்று வியாழன் காலை 10 மணியளவில் தலைவர் டானியல் வசந்தன் தலைமையில் நடைபெற்றது.

எனினும் பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு இந்த அமர்வில் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்படவில்லை.

நகர சபையின் மாதாந்த அமர்வில் கலந்து கொண்டு செய்தி சேகரிக்க ஊடகங்களுக்கு நகர சபையின் தவிசாளரினால் எழுத்து மூலம் அனுமதி வழங்கப்பட்டு வந்தது.

எனினும்நேற்றைய தினம் வியாழக்கிழமை மன்னார் நகர சபையின் 09 ஆவது அமர்வு இடம் பெற்றுள்ள போதும் ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

கடந்த அமர்வில் சபையில் பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்டமையோடு,சில உறுப்பினர்கள் தவிசாளருக்கு எதிராக பல்வேறு கருத்துக்களை முன்வைத்ததனர். நகர சபையின் தவிசாளருக்கும் முன்னாள் தவிசாளருக்கும் இடையில் பெரும் தர்க்கமும் ஏற்பட்டது.

நகர சபை தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு இடையில் இடம் பெற்ற தர்க்கங்கள் பற்றிய விவரம் ஊடகங்களில் வெளியாகிய நிலையில், மக்கள் மத்தியில் அது குறித்து விமர்சனங்கள் வெளியாகின.

இந்த நிலையில் நேற்றைய தினம் இடம் பெற்ற நகர சபையின் அமர்வுக்கு செய்தி சேகரிக்க ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என அறிய முடிகிறது.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை எதிர்த்துப் புத்தூரில் போராட்டம்







அரசினால் புதிதாக முன்வைக்கப்பட்டுள்ள அரசைப் பாதுகாக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் என சகல அடக்குமுறைச் சட்டங்களையும் உடனே அரசாங்கம் மீளப் பெறவேண்டும் என வலியுறுத்தி புத்தூரில் கறுப்புப் பதாகை ஆர்ப்பாட்டம் மற்றும் எதிர்ப்புப் பதாகைகளை வீதியில் கட்சிப்படுத்திப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை மதியம் புத்தூர் பிரதேச சபையின் முன்பாக தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் ஒன்று கூடிய பிரதேச சபையின் உறுப்பினர்கள் அரசு நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தினையும் நீக்கவேண்டும் என கோசம் எழுப்பியமசியுடன் புதிய அரசைப் பாதுகாக்கும் பயங்கரவாதத் தடைச் சட்ட வரைவையும் நீக்கவேண்டும் என வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைதான தமிழ் அரசியல்கைதிகளை அரசு விடுவிக்க வேண்டும், அடக்குமுறைச்சட்டங்கள் ஜனநாயக விரோதமானவை என கோசம் எழுப்பினர். மேலும் அநுர அரசு தேர்தல் காலத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவோம் எனக் கூறி வழங்கிய வாக்குறுதிகள் எங்கே? எனவும் கேள்வி எழுப்பினர்.

இப்போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக கிராமம் கிராமமாக மக்களை சந்திக்கும் நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.




# நாடு முழுவதும் தட்டுப்பாடின்றி எரிவாயு வழங்கும் நடவடிக்கை

## 36 மணித்தியாலங்களில் விநியோகம்

நாட்டில் நிலவிவரும் சமையல் எரிவாயு தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில், விநியோக நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என எரிவாயு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

அடுத்த 36 மணித்தியாலங்களுக்குள் நாடு தழுவிய ரீதியில் எரிவாயு விநியோக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என லாஃப்ஸ் எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது.

அண்மைய நாள்களில் நிலவிய எரிவாயு தட்டுப்பாட்டிற்கான காரணங்கள் குறித்து லாஃப்ஸ் எரிவாயு நிறுவனத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் நலிந்த குருகுலசூரிய விளக்கமளித்துள்ளார்.

அதேவேளை, நாட்டை வந்தடைந்துள்ள 3,900 மெற்றிக் தொன் எரிவாயுவை விநியோகிக்கும் பணிகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் சன்ன குணவர்தன தெரிவிக்கையில்,

“தற்போது நாளொன்றுக்கு 150,000 எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படுகின்றன. மற்றுமொரு எரிவாயு கப்பல் இன்று நாட்டை வந்தடையவுள்ளது.

தொடர்ச்சியான இந்த விநியோக நடவடிக்கைகள் மூலம் சந்தையில் நிலவும் தட்டுப்பாடு விரைவில் சீராகுமென எதிர்பார்க்கப்படு கிறது.” என்று தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாத தடைச்சட்டம் எந்த வடிவத்திலும் வேண்டாம்

## பருத்தித்துறை நகரசபையில் தீர்மானம் நிறைவேற்றல்

பயங்கரவாத தடைச்சட்டம் எந்த வடிவத்திலும் வேண்டாம் என வலியுறுத்தி பருத்தித்துறை நகரசபையிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன்போது தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் இந்த தீர்மானத்திற்கு கடும் எதிர்ப்பினை தெரிவித்திருந்தனர்.

பருத்தித்துறை நகரசபை மாதாந்த அமர்வு நேற்றைய நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கு நகரபிதா வின்சென் டி போல் டக்ளஸ் போல் தலைமையில் ஆரம்பமாகி இடம்பெற்றது.

இதன்போது பயங்கரவாத தடைச்சட்டம் எந்த வடிவத்திலும் வேண்டாம் என்பதை வலியுறுத்தும் தீர்மானம் நகரபிதாவினால் முன்வைக்கப்பட்டது.

இதன்போது, நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படும் சட்டம் தொடர்பில் தீர்மானிக்கும் அதிகாரம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு இல்லை என குறிப்பிட்டு தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

இருப்பினும் ஏனைய 13 உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்த நிலையில் இந்த தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது. இது தொடர்பில் நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல் கருத்து தெரி விக்கையில்,

“பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் புதிய பயங்கரவாதத் தடைச்சட்ட முன்மொழிவை கைவிட வேண்டும். ஏற்கனவே வலுவில் இருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் நீக்க வேண்டும். மக்களின் ஜனநாயக உரிமைகளையும் மனித உரிமைகளையும் அப்பட்டமாக மீறுவதற்கு வழிசமைக்கும் பயங்கரவாத தடைச் சட்டம் அறவே வேண்டவே வேண்டாம்.

இதுவரை பயங்கரவாத தடைச்சட்டமானது தமிழர்களால் மட்டும் எதிர்க்கப்பட்டு வந்த நிலையில் தற்போது சிங்கள, முஸ்லிம் மக்களாலும் கடுமையாக எதிர்க்கப்பட்டு வருகின்றது.

அதுமாத்திரமல்லாது ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட பன்னாட்டு தரப்பினரும் புதிய பயங்கரவாத தடைச்சட்ட முன்மொழிவுக்கு கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்தி வருகின்றனர்.

எனவே, பயங்கரவாத தடைச் சட்டம் எந்த வடிவத்திலும் கொண்டுவரப்படுவதனையோ நடைமுறைப் படுத்தப்படுவதனையோ இந்த அரசு கைவிட வேண்டும்.”– என்றார்.

# கடற்றொழிலாளர்களுக்கு புதிய காப்பீட்டுத் திட்டம்



விவசாயம், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் இயங்கும் விவசாய மற்றும் விவசாய காப்பீட்டுச் சபையினால், கடற்றொழில் நடவடிக்கைகளுக்காக ஆழ்கடலில் மூழ்கிப் பணிபுரியும் கடற்றொழிலாளர்களுக்கு புதிய காப்பீட்டுத் திட்டமொன்று அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக மூழ்காளர் சங்கங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய கடற்றொழிலாளர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இந்த விசேட திட்டம் நடைமுறைக்கு வருகிறது.

கடற்றொழில் சார்ந்த மூழ்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் போது மரணம் சம்பவித்தால், காப்பீடு செய்தவருக்கு 12 லட்சம் ரூபா இழப்பீடாக வழங்கப்படும்.

கடல் அல்லது நன்னீர் நிலைகளில் மூழ்கிப் பணியாற்றும் போது ஏற்படும் விபத்துக்களால் தற்காலிகமாகச் செயலிழப்பவர்கள் அல்லது அங்கவீனமடைபவர்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் இழப்பீடு வழங்கப்படும்.

ஒரு வருடத்திற்கான இந்த காப்பீட்டுப் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ள கடற்றொழிலாளர் ஒருவர் வருடாந்தம் 1,920 ரூபா மாத்திரமே செலுத்த வேண்டும்.

பாதுகாப்புத் தேவையைப் பொறுத்து 12 இலட்சம் மற்றும் 15 இலட்சம் ரூபா வரையான காப்பீட்டுத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

“வளமான நாடு - அழகான வாழ்க்கை” என்ற அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்திற்கு அமைய, உயிருக்கு அதிக ஆபத்துள்ள தொழிலில் ஈடுபடும் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கும், அவர்களது இடர்களை முகாமைத்துவம் செய்வதற்கும் இந்தத் திட்டத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காப்பீட்டுத் திட்டமானது ஆழ்கடல் கடற்றொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் பொருளாதாரப் பாதுகாப்பை உறுதி செய்வதில் முக்கிய மைல்கல்லாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தரமில்லாத நிலக்கரி நஷ்டத்திற்கு மக்கள் ஏன் வரி செலுத்த வேண்டும்

## எதிர்கட்சித் தலைவர் கேள்வி



தரமற்ற நிலக்கரி நஷ்டத்திற்கு மக்கள் ஏன் வரி செலுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியுள்ளார்.

விசேட கூற்றை முன்வைத்து நேற்று உரையாற்றிய போதே அவர் இந்த கேள்வியை முன்வைத்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தரமற்ற நிலக்கரி இறக்குமதி தொடர்பான தகவல்களை ஐக்கிய மக்கள் சக்தி வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து, அரசாங்கத்தின் பொறுப்புள்ள தரப்பினர் இப்போது மக்கள் முன்பாக அந்த நிலக்கரி தரமற்றது என கூறி வருகின்றனர்.

இந்தத் தரமற்ற நிலக்கரி இறக்குமதியால் மின்உற்பத்தி செயல்முறை உரிய செயற்திறனை காட்டாது காணப்படுகின்றது. இந்தத் தரமற்ற நிலக்கரி பயன்பாட்டால் உபகரணங்களுக்கு சேதம் ஏற்படும் போக்கு அதிகரித்துள்ளது.

இதனால் உருவாகும் சாம்பல் அளவு இரண்டு மடங்காக அதிகரித்து, இருக்க வேண்டிய 11-15 வீதம் என்ற அளவிலிருந்து 21 வீதம் வரை அதிகரித்து காணப்படுகின்றன. இந்தச் சாம்பல் வெளியேற்றத்தால் சூழலுக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது.

எதிர்வரும் 2-3 மாதங்களில் மேலும் 15 முதல் 16 நிலக்கரி கப்பல்கள் இறக்குமதிக்கு கொண்டு வரவப்படவுள்ளன.

2009 ஆம் ஆண்டு மின்சார சட்டத்தின் 30 ஆவது பிரிவின்படி, வினைத்திறனான மின்உற்பத்தி மூலம் மட்டுமே மின்சார நுகர்வோரிடம் கட்டணம் அறவிட முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மின்சார நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாக்கும் இலங்கை பொது பயன்பாட்டு ஆணைக் குழு கவனம் செலுத்த வேண்டும்.

இந்தத் தரமற்ற நிலக்கரியால் ஏற்படும், நஷ்டகரமான, ஒழுங்கீனமான மின்உற்பத்தி காரணத்தால் ஏற்பட்ட பெரும் நிதி நஷ்டத்தை நாட்டின் சுமார் 75 லட்சம் மின் நுகர்வோரிடம் இருந்து அறவிட அரசாங்கத்திற்கோ பொது பயன்பாட்டு ஆணைக்குழுவிற்கோ எந்த வகையிலும் முடியாது.““ என்று தெரிவித்தார்.



# டித்வா சூறாவளி நிவாரண பணிகளை துரிதப்படுத்துக: அதிகாரிகளுக்கு ஜனாதிபதி செயலாளர் அறிவுறுத்தல்

டித்வா சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பணிகளை மிகவும் திறமையாகவும் ஒருங்கிணைந்த ரீதியிலும் முன்னெடுக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய சபையின் 16 ஆவது அமர்வின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள அனைத்து நிறுவனங்களும் தனித்தனியாகச் செயல்படாமல், ஒரு கட்டமைப்பின் கீழ் ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலம் விரைவான பலனைப் பெற முடியும் எனச் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

அனர்த்தத்தினால் வீடுகளை இழந்தவர்களுக்கும், ஆபத்தான பகுதிகளில் வசிப்பவர்களுக்கும் புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்காகப் பொருத்தமான காணிகளை அடையாளம் காணுமாறு அறிவுறுத்தப்பட்டது.

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் முறையான பரிசோதனை மற்றும் பரிந்துரைகளுக்கு அமையவே புதிய வீடமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகைகள் மற்றும் கொடுப்பனவுகளைத் தாமதமின்றி வழங்கவும், இதுவரை கொடுப்பனவு கிடைக்காதவர்களின் மேன்முறையீடுகள் குறித்து விசேட கவனம் செலுத்தவும் உத்தரவிடப்பட்டது.

வீட்டுத் திட்டப் பணிகளைத் துரிதப்படுத்துவது தொடர்பாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருடன் விசேட கலந்துரையாடலை நடத்தவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.













# பொடி லெசியை நாட்டிற்கு அழைத்து வருவதற்காக குற்றப் புலனாய்வு அதிகாரிகள் இந்தியா பயணம்

திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குற்றவாளியான "பொடி லெசி" என அழைக்கப்படும் ஜனித் மதுசங் கவை அழைத்து வருவதற்காக குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் குழு நேற்று முன்தினம் பிற்பகல் நாட்டி லிருந்து புறப்பட்டு சென்றுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.



பொடி லெசி சட்டவிரோதமாக இந்தி யாவிற்கு சென்ற குற்றச்சாட்டில் இந்திய பாதுகாப்பு பிரிவினால் கைது செய்யப் பட்டிருந்தார்.

அந்நாட்டு சட்ட நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் இலங்கை அதிகாரிகளிடம் கையளிக்கப்படவுள்ள சந்தேகநபரை நாட்டிற்கு அழைத்துவர நடவடிக்கை எடுப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# சந்திராணிக்கு எதிரான ஊழல் வழக்கு: மார்ச் 05 ஆம் திகதி மீண்டும் விசாரணை

மகளிர் மற்றும் சிறுவர் விவகார முன்னாள் அமைச்சர் சந்திராணி பண்டாரவுக்கு எதிராக லஞ்ச மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு வினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஊழல் வழக்கு, 2026 மார்ச் 05 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி ரவீந்திர பிரேமரத்ன முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

இதன்போது, குற்றம் சுமத்தப்பட் டுள்ள முன்னாள் அமைச்சர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்த ரணி நலின் லத்துவாஹெட்டி, தனது சேவை பெறுநருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிகையில்



மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் தொடர்பாக ஆரம்பகட்ட ஆட்சேபனை களை முன்வைத்தார்.

இருதரப்பு சமர்ப்பணங்களையும் பரிசீலித்த நீதிபதி, வழக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

2019 ஜனவரி 14 முதல் ஜனவரி 31 வரையான காலப்பகுதியில் இடம் பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பிலேயே சந்திராணி பண்டார வுக்கு எதிராக இந்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உரிய நடைமுறைகளைப் பின்பற்றா மல், வறண்ட மண்டல அபிவிருத்தி அமைச்சின் திட்டப் பணிப்பாளராக எச். எம். சந்திரவன்ச என்பவரை நியமித் தமை.சட்ட விதிகளுக்கு முரணாக தனது சகாக்கள் பலரை பல்வேறு பதவிகளில் நியமிக்குமாறு அமைச்சின் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்தமை என்பனவே அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக் களாகும்.

# மூன்று ஊழல்களில் சிக்கியுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம்

## துஷார இந்துனில் தெரிவிப்பு

தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த ஓராண்டு காலத்திற்குள் மூன்று பிரதான ஊழல் களில் சிக்கியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் குற்றஞ் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத் துள்ளார். அவர் மேலும் தெரிவிக் கையில்,

"தரமற்ற நிலக்கரியால் நுரைச் சோலை மின்நிலைய உற்பத்தி குறைந் துள்ளது. இதனை ஈடு செய்ய டீசல் மின்நிலையங்களைப் பயன்படுத்துவ தால் நாட்டுக்கு சுமார் 3,026 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இந்த நஷ்டத்தை ஈடு செய்ய மார்ச் மாதம் முதல் மின்சாரக் கட்டணத்தை



உயர்த்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அதிகாரிகளின் தவறுக்கு அப்பாவி மக்கள் ஏன் தண்டப்பணம் செலுத்த வேண்டும்.

அரசாங்கத்தின் ஊழல்கள் மற்றும் தோல்விகளை மறைக்கவே, முன்னாள் புலனாய்வுப் பிரிவு பிரதானியை அர சாங்கம் தற்போது கைது செய்துள்ளது.

2025 ஏப்ரல் 21 இற்குள் உண் மையான சூத்திரதாரியைப் பிடிப்பதாக ஜனாதிபதி அநுர குமார வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. இப்போது மக்களின் கவனத்தை திசை திருப்ப இந்த கைதுகள் ஒரு "ஊடக நாடகமாக" அரங்கேற்றப்படுகின்றன.

நெல்லுக்கு 120-130 ரூபா உறுதி மொழி விலை அறிவிக்கப்பட்டாலும், நடைமுறையில் விவசாயிகள் 80-85 ரூபாய்க்கே நெல்லை விற்க வேண் டியுள்ளது.

நெல் சந்தைப்படுத்தல் சபை ஒதுக் கப்பட்ட நிதியில் வெறும் 2.5 வீதம் மாத்திரமே நெல் கொள்வனவு செய்துள் ளது. இதனால் விவசாயிகள் தனியார் மில் உரிமையாளர்களிடம் ஏமாற்றப் படுகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தி எவ்வித "டீல்" அரசியலிலும் ஈடுபடாத தூய்மையான கட்சி.

ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகி யுள்ள எரிசக்தி அமைச்சரை உடனடி யாக பதவி நீக்கம் செய்து, நிலக்கரி விலைமனுவை இரத்து செய்யவேண் டும்." என்று தெரிவித்தார்.




**எய்டன் மார்க்ரம்**

| ஓட்டங்கள் | பந்துகள் | சிக்ஸர்கள் | பௌண்டரிகள் |
|---|---|---|---|
| 82 | 46 | 04 | 07 |

# மேற்கிந்தியத் தீவுகளை வென்ற தெ.ஆபிரிக்கா

# அரையிறுக்கு முன்னேற்றம்!

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் சுப்பர்-8 சுற்றுகள் நடைபெற்று வருகின்றன.

இதில் நேற்றைய ஆட்டத்தில் தென்னாபிரிக்கா – மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் விளையாடின.

இதில் நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி பந்து வீச்சைத் தெரிவு செய்தது.

அதன்படி முதலில் களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி தொடக்கத்தில் 83 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்து திணறியது.

இந்நிலையில், ஹோல்டர் மற்றும் ஷெப்பர்ட் ஜோடி சேர்ந்து பொறுப்புடன் விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தியது.

இறுதி ஓவரில் ஹோல்டர் 49 ஓட்டங்களுடன் 'ரன்-அவுட்' ஆனார். ஷெப்பர்ட் 52 ஓட்டங்களுடன் கடைசி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் நின்றார்.

20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 176 ஓட்டங்களைச் சேர்த்தது மேற்கிந்தியத் தீவுகள்.

தென்னாபிரிக்கா சார்பாக பந்துவீச்சில் லுங்கி இங்கிடி 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

பின்னர் 177 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய தென்னாபிரிக்கா அணியின் தொடக்க வீரர்களாக மார்க்ரம்- டி கொக் ஆகியோர் களமிறங்கினர்.

இருவரும் தொடக்கம் முதலே அதிரடியாக விளையாடினர். டி கொக் 27 பந்துகளில் 44 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து மார்க்ரமுடன் ரிக்கல்டன் ஜோடி சேர்ந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார்.

தொடர்ந்து அதிரடியாக விளையாடிய மார்க்ரம் 27 பந்துகளில் அரைச்சதம் விளாசினார். கடைசி வரை விளையாடிய ரிக்கல்டன் 45 ஓட்டங்களுடனும் மார்க்ரம் 82 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் நின்றனர்.

இதனால் தென்னாபிரிக்கா அணி, ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 16.1ஆவது ஓவரில் 177 ஓட்டங்களைத் தொட்டு 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

ஆட்டத்தின் நாயகனாக தென்னாபிரிக்காவின் மார்க்ரம் தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க அணி அரையிறுதியை உறுதி செய்தது.

தென்னாபிரிக்க அணி ஏற்கனவே, இந்திய அணியை வென்றிருந்தது.

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு இன்னுமோர் ஆட்டம் இந்தியாவுடன் உள்ளமை குறிப்பித்தக்கது.

## ரி-20 உலகக் கிண்ணம்: 'சுப்பர்-8'

### குழு 01 - புள்ளிப்பட்டியல்

| அணிகள் | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|
| தெ.ஆ. | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 2.890 |
| மே.இ.தீ. | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | 1.791 |
| இந்தியா | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | -0.100 |
| சிம்பாப்வே. | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -4.475 |




திலக் வர்மா - ஹர்திக் பாண்டியா



பிரையன் பென்னட்

# இந்தியா அதிரடி

## பாண்டிய-வர்மா ஜோடி கொளுத்திப் போட்ட சரவெடியால் சரணடைந்தது சிம்பாப்வே

ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் சிம்பாப்வேக்கு எதிராக நேற்றிரவு நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிபெற்றது. இதன் மூலம் அரையிறுதிக்கான வாய்ப்பையும் தக்க வைத்தது.

ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் குழு –1இன் சுப்பர் – 8 ஆட்டம் ஒன்று சென்னை சேப்பாக்கத்தில் நேற்றிரவு நடந்தது.

இதில், இந்திய – சிம்பாப்வே அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற சிம்பாப்வே அணி முதலில் பந்துவீசத் தீர்மானித்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத் தாடிய இந்திய அணியின், சஞ்சு சம்சன் 24 ஓட்டங்களுடனும், இஷான் கிஷன் 38 ஓட்டங்களுடனும் ஓரளவுக்கு நல்ல நிலையில் அணியை விட்டு ஆட்டமிழந்தனர். அதிரடியில் மிரட்டிய அபிஷேக் சர்மா 30 பந்துகளில் 55 ஓட்டங்களையும் அணித்தலைவர் சூர்யகுமார் யாதவ் 33 ஓட்டங்களையும் சேர்த்துச் சென்றனர்.

பின்னர், 5ஆவது விக்கெட்டுக் காக இணைந்த திலக் வர்மா – ஹர்திக் பாண்டியா ஜோடி சிக்ஸர், பௌண்டரிகளை விளாசியது. பாண்டியா 23 பந்துகளில் 50 ஓட்டங்களையும் திலக் வர்மா 16 பந்துகளில் 44 ஓட்டங்களையும் குவித்து கடைசிவரை களத்தில் நின்றனர்.

இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 256 ஓட்டங்களைக் குவித்தது.

பின்னர், 257 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் களமிறங்கிய சிம்பாப்வே அணி, 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 184 ஓட்டங்களை மாத்திரமே சேர்த்தது.

இதன்மூலம் 72 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்தியா அரையிறுதி வாய்ப்பைத் தக்கவைத்தது.

சிம்பாப்வே அணி சார்பாக தொடக்க வீரர் பிரையன் பென்னட், தனியாளாக – அதிரடியாக ஆடி 97 ஓட்டங்களைக் குவித்திருந்தார்.

இந்தியா சார்பாக பந்துவீச்சில் அர்ஷ்தீப் சிங் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

ஆட்டநாயகனாக இந்தியாவின் பாண்டியா தெரிவானார்.

## ரி-20 உலகக் கிண்ணம் ‘சுப்பர்-8’: இன்றைய போட்டி

ICC MEN'S T20 WORLD CUP INDIA & SRI LANKA 2026

குழு-02

இங்கிலாந்து எதிர் நியூஸிலாந்து

வெள்ளி 27 பெப் 7 மணி-இரவு

ஆர்.பிரேமதாச இலங்கை



# ஒரே கட்டமாக தேர்தலை நடத்த வேண்டும்: தேர்தல் ஆணையரிடம் கட்சிகள் கோரிக்கை

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை நேர்மையாக, வெளிப்படைத் தன்மையுடன் ஒரே கட்டமாக நடத்த வேண்டும் என்று சென்னையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரிடம் அரசியல்கட்சிப் பிரதிநிதிகள் வலியுறுத்தி உள்ளனர்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் விரைவில் நடைபெற உள்ளது. தேர்தலை நேர்மையாக, வெளிப்படைத் தன்மையுடன் நடத்துவதற்கான ஆலோசனைகளைப் பெறும் வகையில் தமிழகத்தில் உள்ள 12 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் ஆணையம் அழைப்பு விடுத்தது.

அதன்படி, தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் தலைமையில் சென்னையில் நேற்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில்,




தேசியக் கட்சிகளான பா.ஜ.க, காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட், பகுஜன் சமாஜ், ஆம் ஆத்மி, தேசிய மக்கள்கட்சி மற்றும் மாநிலக் கட்சிகளான தி.மு.க, அ.தி.மு.க, தே.மு.தி.க, வி.சி.க, நா.த.க. ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்று, பல்வேறு ஆலோசனைகளை வழங்கினர்.

இந்திய கொம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவர் நல்லகண்ணுவின் இறுதி அஞ்சலி நிகழ்வுக்குச் சென்றதால் அக்கட்சி சார்பில் யாரும் பங்கேற்கவில்லை. அக்கட்சியின் கருத்துகளை மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் தெரிவித்தார். தமிழகத்தில் ஒரே கட்டமாக தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதையே அனைத்துக் கட்சியினரும் வலியுறுத்தினர்.

இதைத் தொடர்ந்து, தேர்தலை பாதுகாப்பாக நடத்துவது தொடர்பாக மாவட்ட ஆட்சியர்கள், எஸ்.பி.க்கள், ஐ.ஜி.க்களுடன் தலைமை தேர்தல் ஆணையர் ஆலோசனை நடத்தினார்.

வாக்குச்சாவடிகள் மற்றும் தேர்தல் பணியாளர்களின் தயார்நிலை, வாக்கு எண்ணும் மையங்கள், தேவையான பாதுகாப்பு படையினர், பறக்கும் படைகள் அமைப்பது உள்ளிட்டவற்றில் செய்யப்பட்டுள்ள முன்னேற்பாடுகள் குறித்து மாவட்ட வாரியாக கேட்டறிந்தார்.

# நல்லகண்ணு உடலுக்கு 72 குண்டுகள் முழக்கம்

## தமிழக அரசு மரியாதை

மறைந்த இந்திய கொம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணு உடலுக்கு 72 துப்பாக்கி குண்டுகள் முழங்க அரசு சார்பில் முழு மரியாதை செலுத்தப்பட்டது.

இந்திய கொம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் மற்றும் சுதந்திர போராட்ட வீரருமான நல்லகண்ணு நேற்று முன்தினம் வயது மூப்பின் காரணமாக உயிரிழந்தார். அவருக்கு வயது 101 . சென்னை தியாகராய நகரில் உள்ள இந்திய கொம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகத்தில் அவரது உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பின்னர், அரசியல் கட்சி தலைவர்கள், திரையுலகினர் என அனைவரும் நல்லகண்ணு உடலுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து, மலர் வளையம் வைத்து மறைந்த நல்லகண்ணு உடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அஞ்சலி செலுத்தினார். பின்னர், 72 குண்டுகள் முழங்க 24 பொலிஸார் 3 முறை வானத்தை நோக்கி சுட்டனர். முதல்வர் ஸ்டாலின் தலைமையில் தலைவர்கள் நல்லகண்ணுக்கு 'வீர வணக்கம்' செலுத்தினர்.

நல்லகண்ணு இறப்புக்கு பிறகு தன்னுடைய உடலை



மருத்துவமனைக்கு தானமாக வழங்க விருப்பம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், நல்லகண்ணுவின் உடல் அவரது விருப்பப்படி சென்னை சென்ட்ரலில் உள்ள ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு தானமாக ஒப்படைக்கப்படுகிறது. நல்லகண்ணுவின் இறுதி ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்று வீரவணக்கம் செலுத்தி அவருக்கு பிரியாவிடை கொடுத்தனர்.

# ராகுல் காந்தி மார்ச் 5 இல் தமிழ் நாட்டுக்கு விஜயம்

காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி, மார்ச் 5 ஆம் திகதி தமிழகத்துக்கு விஜயம் மேற்கொள்கின்றார்.

தமிழகத்தில் விரைவில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதையடுத்து அனைத்து அரசியல் கட்சிகளும் தீவிரமாக களத்தில் இறங்கியுள்ளன.

என்.டி.ஏ. கூட்டணிக்கு ஆதரவு திரட்டுவதற்காக மார்ச் 1 ஆம் திகதி பிரதமர் மோடி தமிழகம் வர உள்ளார். மேலும் அவர் திருப்பரங்குன்றம் சென்று சுவாமி தரிசனம் செய்வார் எனக் கூறப்படுவதால் தமிழக



அரசியலில் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

இந்தச் சூழலில் தி.மு.க. கூட்டணியில் பேச்சுவார்த்தைக்கு காங்கிரஸ் இன்னும் அழைக்கப்படவில்லை. இதனால் காங்கிரஸ் தலைவர்கள் சிலர் அதிருப்தியில் உள்ளனர்.

முதல்வர் ஸ்டாலினுடன் கே.சி வேணுகோபால் பேச்சுவார்த்தை நடத்திய பிறகும் இழுபறி நீடிக்கிறது. இப்படியான நிலையில், மார்ச் 5 ஆம் திகதி ராகுல் சென்னை வரவுள்ளார் என தகவல் வெளியாகியிருக்கிறது.

அன்றைய தினம் காங்கிரஸ் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொதுக்கூட்டத்தில் ராகுல் பேசுவார் எனக் கூறப்படுகிறது. அந்த பொதுக் கூட்டத்தில் ஒரு லட்சம் தொண்டர்கள் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# மோடி - நெதன்யாகு முன்னிலையில் இந்தியா - இஸ்ரேல் 17 ஒப்பந்தங்கள்

பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு முன்னிலையில் இந்தியா - இஸ்ரேல் இடையே 17 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

உத்தியோகபூர்வ பயணமாக இஸ்ரேல் சென்றுள்ள பிரதமர் மோடிக்கு அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நேற்று முன்தினம் இரவு விருந்து அளித்தார். அப்போது பிரதமர் மோடி போல, இந்திய பாரம்பரிய உடையை அவர் அணிந்திருந்தார்.

முன்னதாக, இருவரும் இணைந்து ஜெருசலேமில் நடைபெற்ற தொழில்நுட்பக் கண்காட்சியை பார்வையிட்டனர். ஹிட்லர் ஆட்சியின்போது



கொல்லப்பட்ட யூதர்கள் நினைவாக ஜெருசலேமில் அமைக்கப்பட்டுள்ள ஹோலோகாஸ்ட் நினைவு அருங்காட்சியகத்தை பிரதமர் மோடி நேற்று பார்வையிட்டு, உயிரிழந்த யூதர்களுக்கு அஞ்சலி செலுத்தினார். பிறகு, இஸ்ரேல் ஜனாதிபதி ஐசக் ஹெர்சாக்கை சந்தித்து, இந்தியா வருமாறு அழைப்பு விடுத்தார்.

பின்னர், வர்த்தகம், பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இணைந்து பணியாற்றுவது குறித்து மோடியும், நெதன்யாகுவும் முக்கிய ஆலோசனை நடத்தினர். நிறைவாக, அவர்களது முன்னிலையில் இந்தியா - இஸ்ரேல் இடையே 17 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. 10 முக்கிய அறிவிப்பு களும் வெளியிடப்பட்டன.

குறிப்பாக வேளாண்மை தொழில்நுட்பங்கள், செயற்கைக் கோள் தரவுகள், யு.பி.ஐ. பணப் பரிமாற்றம் உள்ளிட்டவை தொடர்பாக முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இதன்பின்னர், இருவரும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

# பிரித்தானிய விசா நடைமுறை மாற்றம் இனி கடவுச்சீட்டில் ஸ்டிக்கர் கிடையாது

ஐக்கிய இராச்சியத்தின் குடிவரவுத் துறையில் மிகப்பெரிய மாற்றமாக, விசா ஸ்டிக்கர் வழங்கும் முறை முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

2026 பெப்ரவரி 25 முதல் விண்ணப்பிக்கும் அனைத்துப் பயணிகளுக்கும் இனி டிஜிட்டல் முறையிலான 'eVisa' மட்டுமே வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் டிஜிட்டல் விசா முறையைப் பின்பற்றி, பிரித்தானியாவும் முழுமையான டிஜிட்டல் குடிவரவு முறைக்கு மாறியுள்ளது.

இதற்கு முன்னர் விசா அனுமதிக்கப்பட்டதும், உங்களது கடவுச்சீட்டில் விசா ஸ்டிக்கர் ஒட்டப்படும். இதற்காக விண்ணப்பதாரர்கள் தமது கடவுச்சீட்டை விசா விண்ணப்ப மையத்தில் ஒப்படைக்க வேண்டியிருந்தது.

புதிய மாற்றத்தின்படி இனி கடவுச்சீட்டில் எவ்வித ஸ்டிக்கர்களும் ஒட்டப்படமாட்டாது.

உங்களது விசா அனுமதி, உங்களது கடவுச்சீட்டுடன் இணைக்கப்பட்ட மின்னணு முறையில் UKVI இணையக் கணக்கில் சேமிக்கப்படும்.

பெப்ரவரி 25 முதல் புதிய விண்ணப்பதாரர்களுக்கு டிஜிட்டல் விசா மட்டுமே செல்லுபடியாகும்.

UKVI உத்தியோகபூர்வ அறிவிப்பின்படி, பயணிகள் பயணத்திற்கு முன்னர்



பின்வரும் படிமுறைகளை மேற்கொள்ள வேண்டும்.

**UKVI கணக்கை உருவாக்குதல்:**

உங்களது மின்னஞ்சல் மற்றும் கடவுச்சீட்டு விபரங்களைப் பயன்படுத்தி உத்தியோகபூர்வ இணைய தளத்தில் இலவசமாக ஒரு கணக்கை உருவாக்கவும்.

**e-Visa-வை சரிபார்த்தல்:**

உங்களது கணக்கிற்குள் நுழைந்து உங்களது விசா அனுமதி டிஜிட்டல் முறையில் உள்ளதா என உறுதிப்படுத்தவும்.

**விபரங்களைச் சரிபார்த்தல்:**

டிஜிட்டல் விசாவில் உள்ள கடவுச்சீட்டு இலக்கமும், நீங்கள் கையில் வைத்திருக்கும் கடவுச்சீட்டு இலக்கமும் சரியாக இருப்பதை உறுதி செய்யவும்.

**கவனத்தில் கொள்ள வேண்டியவை**

24 மணிநேரத்திற்கு முன்னர்: பயணத்திற்கு குறைந்தது 24 மணி நேரத்திற்கு முன்னதாக உங் களது UKVI கணக்கில் விவரங்கள் சரியாக உள்ளனவா எனச் சரிபார்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**புதிய கடவுச்சீட்டு:**

விசா பெற்ற பின்னர் நீங்கள் புதிய கடவுச்சீட்டு எடுத்தால், உடனடியாக அதை உங்களது UKVI கணக்கில் புதுப்பிக்க வேண்டும். இல்லையெனில் விமான நிறுவனங்கள் உங்களை அனுமதிக்காது.

**Share Code:**

உங்களது விசா அந்தஸ்தை நிரூபிக்க 'Share Code' எனும் குறியீட்டைப் பயன்படுத்தலாம்.

**விண்ணப்பதாரர்களுக்குக் கிடைக்கும் நன்மை**

இனிமேல் விசா விண்ணப்ப மையங்களில் உங்களது கடவுச்சீட்டை ஒப்படைக்கத் தேவையில்லை. ஒரு முறை நேர்முகத் தேர்விற்குச் சென்றுவிட்டு, கடவுச்சீட்டை நீங்களே கையில் வைத்திருக்கலாம். பெப்ரவரி 25 இற்கு முன்னர் விசா ஸ்டிக்கர் பெற்றவர்களின் விசாக்கள் காலாவதியாகும் வரை செல்லு படியாகும். இருப்பினும், அவர்களும் ஒரு UKVI கணக்கை உருவாக்கித் தமது விபரங்களை டிஜிட்டல் மயப் படுத்துமாறு உள்துறை அமைச்சு பரிந்துரைத்துள்ளது.

# ஈரான் ஏவுகணைத் திட்டம்: பேச்சுவார்த்தைக்கு மறுப்பு

ஈரானின் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைத் திட்டம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த அந்த நாடு மறுப்பது பெரிய சிக்கலாக அமையும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ தெரிவித்துள்ளார்.

ஈரான் தற்போது தனது சொந்த ஏவுகணைகளை உருவாக்கி வரும் நிலையில், அமெரிக்காவைத் தாக்கக்



கூடிய ஏவுகணைகளை டெஹ்ரான் உருவாக்கி வருவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் குற்றம் சாட்டியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட மறுநாளே, அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஈரானின் ஏவுகணைத் திட்டம் குறித்து விவாதிக்க அழைப்பு விடுத்துள்ளார்.

இருப்பினும், ஈரான் இதனைப் பற்றி விவாதிக்க மறுத்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இன்றைய ராசி பலன்கள் - 27.02.2025




உங்கள் ஆற்றலை குறைக்கும் விதத்தில் உங்கள் மனதில் அவநம்பிக்கையான உணர்வுகள் தோன்றும்.நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் செயல்பட்டால் நீங்கள் சாதகமான பலன்களைப் பெறலாம்.

இன்று பணிச்சுமை கடினமாக காணப்படும்.இது உங்களுக்கு கவலையை அளிக்கும். ஆரோக்கியக் குறைபாடு காரணமாக உங்கள் பணிகளை விரைந்து ஆற்ற இயலாது.

நீங்கள் ஆவேசமான மன நிலையில் காணப்படுவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. எனவே அதனை தவிர்ப்பது நல்லது.

இன்று குறைவான பண வளர்ச்சி காரணமாக குறைந்த பண வரவு காணப்படும். பணத்தை திறமையுடன் கையாள வேண்டியது அவசியம்.

உங்கள் தாயின் உடல் நலனுக்காக நீங்கள் பணத்தை செலவு செய்வீர்கள்.




இன்றைய நாளை உங்களுக்கு சாதக மாக ஆக்கிக் கொள்ளலாம்.உங்களின் மனநிலையின் மூலம் இது சாத்தியம். உங்கள்நோக்கம் நிறைவேறும் வகையி லான நல்ல முடிவுகளை நீங்கள் எடுப்பீர்கள்.

உங்கள் மனதில் காணப்படும் உறுதி காரணமாக உங்கள் பணியில் முன்னனியில் இருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்ப்பீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் இனிமையாகப் பேசி இன்றைய நாளை சந்தோஷமாக கழிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் போதுமானதாக இருக்கும். பணத்தை உங்கள் சொந்த தேவைக்கு பயன்படுத்துவீர்கள் மற்றும் சேமிப்பீர்கள்.

இன்று உங்களிடம் காணப்படும் நம்பிக்கையுணர்வு காரணமாக ஆரோக்கியமாக இருபதாக உணர்வீர்கள்.




இன்று அதிர்ஷ்டம் குறைவாக காணப் படும் நாள்.எந்த முயற்சி எடுத்தாலும் அதை குறித்த நேரத்தில் முடிப்பது சிறிது கடினமாக இருக்கும்.நீங்கள் பிறரிடம் உரையாடும் போது கவனமாக இருக்க வேண்டும்.

உங்களின்பணிச்சூழல் மகிழ்ச்சி அளிப்பதாக காணப்படாது.உங்களின் கடின உழைப்புக்காக நல்ல பெயரை பெற முடியாத சூழல் காணப்படும்.

உங்கள் துணையால் நீங்கள் புறக்கணிக்கப் படுவது போல உணர்வீர்கள். இம்மாதிரியான உணர்வுகளை தவிர்த்து இன்றைய நாளை சந்தோஷமான நாளாக ஆக்குங்கள்.

அதிகரிக்கும் குடும்ப பொறுப்புகள் காரணமாக இன்று அதிகமாக செலவு செய்ய நேரும்.

உங்கள் தந்தையின் உடல் நலனுக்காக செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.




இன்று சற்று அனுகூலமற்ற நாளாக இருக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க இயலாத நிலை இருக்கும். இன்று பொறுமை அவசியம். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப் படும். பணியிடச் சூழலில் சுமூகமான நிலை இருக்காது. சக பணியாளர்களுடனான தொடர்பில் சில பிரச்சினைகள் காணப்படும்.

இன்று முழுவதும் உங்கள் துணையுடன் அமைதியாக கட்டுப்பாட்டுடன் பழகுங்கள். தேவையற்ற பேச்சுக்களை தவிர்க்கும் வகையில் நாவடக்கம் மேற்கொள்ளுங்கள்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளுக்காக கடன் வாங்குவீர்கள்.

தோல் அரிப்பு மற்றும் களைப்பு காரணமாக ஏற்படும் போதிய தூக்கமின்மை உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று சிறந்த நாளாக இருக் கும். நீங்கள் இன்று விரைந்து செயலாற்று வீர்கள். இதனால் திருப்தி ஏற்படும். இன்று பயணங்களால் ஆதாயம் ஏற்படும். இன்று வளர்ச்சி பெறுவது உறுதி.

இன்று சிறப்பாக பணியாற்றுவீர்கள். இன்று பணியில் மும்மரமாக ஈடுபடுவீர்கள். உங்கள் பணிகளை திறம்பட மேற்கொள்வீர்கள்.

உங்கள் நலன் குறித்த முக்கிய முடிவு எடுக்க உங்கள் துணை உங்களுக்கு வழி காட்டுவார். இதனால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

இன்று பணவரவு அதிகமாக இருக்கும். நிதிநிலை சுதந்திரமாக இருக்கும். பணத்தை நகை மற்றும் ஆடம்பர பொருட்கள் வாங்குவதற்கு பயனுள்ள வகையில் பயன்படுத்துவீர்கள்.




இன்று உங்களுக்கு முன்னேற்றம் எளிதில் கிடைக்கும்.சிறிதளவு முயற்சி யாயினும் வெற்றி நிச்சயம்.உங்கள் திறமை வெளிஉலகத்தில் பளிச்செனத் தெரியும். இன்று தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

இன்று பணிகள் மிக அதிகமாக இருப்பதைக் காண்பீர்கள். உங்கள் திறமைகளை வெளிப்படுத்த புதிய வாய்ப்புக்களுக்கு நீங்கள் முயலலாம்.

உங்கள் துணையிடம் மனம் திறந்து பேசுவீர்கள். இது உங்கள் துணையை திருப்திபடுத்தும்.

இன்று உங்களிடம் பணம் மிகுதியாக காணப்படும். அதை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்கள் மனதில் காணப்படும் தைரியம் மற்றும் திருப்தி காரணமாக உங்கள் ஆரோக்கியம் இன்று சிறப்புடன் காணப்படும்.




இன்று சிறந்த வளர்ச்சி காணப்படும். உங்கள் சிறிய முயற்சியின் மூலம் பெரிய வெற்றி காண்பீர்கள். இன்று நீங்கள் மிகுந்த நம்பிக்கையுடன் காணப்படு வீர்கள்.

உங்கள் பணி சம்பந்தப்பட்ட முக்கிய மான சந்திப்பில் நீங்கள்மூழ்கியிருப்பீர்கள். இந்தச் சந்திப்பில் உங்கள் உரையாடலைக் கண்டு உங்கள் சகபணியாளர்கள் ஆச்சரியமடைவார்கள்.

உங்கள் துணையுடன் நட்பான முறையில் பழகுவீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

இன்று சீரான ஆரோக்கியம் காணப்படும். தேக ஆரோக்கியம் சிறப்புடன் இருக்கும்.




இன்று அசௌகரியங்கள் காணப் படும். அதற்கு உங்கள் மனஅழுத்தங்கள் காரணமாக இருக்கலாம்.மன அழுத் தத்தைக் குறைக்க நல்ல இசையை கேட்பது திரைப்படங்கள் பார்ப்பது போன்ற பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளுங்கள்.மகிழ்ச்சி கிடைக்கும்.

உங்கள் பணிகளை சமாளிப்பது கடினமாக காண்பீர்கள். எனவே திட்டமிட்டு பணியாற்றினால் வெற்றிக்கு வழி கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இது உறவில் அமைதியையும் நல்லினக்கதையும் பாதிக்கும்.

இன்று பணத்தை கையாள்வது கடினமாக இருக்கும். பண இழப்பிற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இன்று உங்களிடம் காணப்படும் பதட்டம் காரணமாக நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உருவாகலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 27.02.2025




இன்று மந்தமாக காணப்படுவீர்கள். சுறுசுறுப்புடன் இருக்க வேண்டியது அவசியம்.நல்லதையே நினையுங்கள்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்றுவதில் சில ஏமாற்றங்களோ அல்லது தடைகளோ காணப்படும். உங்கள் சகபணியாளர்களுடனான உங்கள் தொடர்பாடல் நற்பலன்களை அளிக்காது.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் நடக்க வாய்ப்புள்ளது. இதனை தவிர்த்து நட்புடன் பழகுவது நல்லது.

இன்று செலவுகள் தவிர்க்க முடியாது. எனவே செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படாது. முதுகு வலி மற்றும் இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று துடிப்பான நாளாக இருக்கும். உங்கள் இலட்சியங்களை அடைவதற்கு உகந்த நாள். நீங்கள் உங்களுக்கென சில செயல்களை அமைத்துக் கொண்டு அதில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் சகபணியாளர்களுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள்.கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான முறையில் பழகுவீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.

இன்று பணம் மிகுதியாக காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் நல்ல காரியங்களுக்கு பயன் செய்வீர்கள்.

இன்றைய நாள் உங்களுக்கு சௌகரியங்கள் வழங்கும் என்பதால் நீங்கள் இன்று நல்ல ஆரோக்கியத்தைப் பராமரிப்பீர்கள்.




இன்று வெற்றிகரமான நாளாக இருக்கும்.நீங்கள்செய்யும் செயல்கள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக முடியும்.நீங்கள் நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.உங்கள் திறமைகள் பாராட்டைப் பெறும். உங்கள் செயல்திறன் மூலம் உங்களுக்கு கூடுதல் நன்மைகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான நினைவுகளை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். இன்று உங்களிடம் காணப்படும் அதிகப்படியான ஆற்றல் உங்கள் ஆரோக்கியத்தை சிறப்புடன் வைத்திருக்கும்.




இன்று குறைந்த பலன்களே கிடைக் கும்.இன்று சில ஏமாற்றங்களைக் காண்பீர்கள்.எல்லாவற்றையும் நட்பு முறையோடு அணுகுங்கள்.

நீங்கள் அதிகமாக பணியாற்ற வேண்டியிருக்கும்.அது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.பணியாற்றும் முறையை திட்டமிட்டுஅதற்கேற்றாற் போல செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சுமுகமான உறவு காணப்படாது. அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும். இனிமையான வார்த்தைகளைப் பேச வேண்டும். துணையின் விருப்பபடி நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்புகள் உள்ளது. பணத்தை கவனமுடன் கையாள வேண்டும்.

# குப்பை கொட்டுவதை அவதானிக்க வவுனியா பிரதேச வீதிகளில் கமரா

## வவுனியா தெற்குப் பிரதேச சபை அதிரடி



(கி.வசந்தன்)

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக் குட்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் வீதியில் குப்பை கொட்டுவதை அவதானித்து நடவடிக்கை எடுக்கும் பொருட்டு வீதிகளில் பல இடங்களில் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்படுவதாக பிரதேசசபையின் தலைவர் பாலேந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில் கூறியவை வருமாறு:-

சுற்றுச்சூழல் மாசு மற்றும் வீதியோர கழிவு அகற்றுவதில் ஏற்படுகின்ற பல்வேறு நெருக்கடிகளை கருத்தில் கொண்டு எமது பிரதேச சபைகக்குட்பட்ட 57 இடங்களில் கண்காணிப்பு கமராக்கள் இன்று(நேற்று) பூட்டப்பட்டன.

வீதியோரங்களில் குப்பை கொட்டு வோரை கண்டறிந்து அவர்களுக்கு தண் டனை வழங்கும் நோக்கோடு இந்தக் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப் பட்டமையோடு பல்வேறு சட்ட விரோத செயற்பாடுகளும் இதன் ஊடாக கண் காணிக்கப்படும் எனவும் பிரதேசசபையின் தலைவர் பாலேந்திரன் தெரிவித்தார்.